Registered as a Newspaper in Ceylon

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

| ஈழநாடு சந்தா விபரம் | | |
|---|---|---|
| இந்தியா — இலங்கை | வாரப்பதிப்பு உட்பட | வாரப்பதிப்பு மட்டும் |
| 1 வருடம் | 48-00 | 13-00 |
| 6 மாதம் | 25-00 | 6-50 |
| 3 மாதம் | 13-00 | 3-25 |

போன்: 389 National Tamil Daily தேசிய தினசரி தபால் பெட்டி எண் 49

மலர் 7 யாழ்ப்பாணம் குரோதி மாசி 5 ஆம் நாள் ஷவ்வால் பிறை 13 (16-2 65) செவ்வாய்க்கிழமை இத

University ... RECEIVED ... Periodicals ... Library

# இந்தி, ஆங்கிலத்திணிப்பு இருக்காது

## விநோபாஜி திட்டத்தை சகல முதன்மந்திரிகளும் ஏற்றனர்

### அரசாங்கமும் ஏற்கும் என உள்நாட்டு மந்திரி நந்தா அறிவிப்பு

### நெல்லூரில் பொலிஸ் சூடு ஒருவர் பலி

வரட்சிக்குப் பின்

## நாட்டின் பல பகுதிகளிலும் பலத்த மழை

யாழ்ப்பாணம், செவ்வாய்

யாழ்ப்பாண மாவட்டத்தில் கடந்த இரு தினங்களாகப் பெய்த கடுமழை காரணமாக வடபகுதியில் பலத்த நஷ்டமேற்பட்டுள்ளது. நீண்டகால வரட்சிக்குப்பின் பெய்த மழை வெங்காயம், புகையிலைச் செய்கைக்காரருக்கு பெருமளவு நஷ்டத்தை ஏற்படுத்தியுள்ளது.

சூருவளியினால் வடபகுதி மக்களுக்கு ஏற்பட்ட கஷ்டங்களிலிருந்து நிவாரணம் பெறுமுன் மீண்டும் சோதனைக் காலம் ஏற்பட்டுள்ளதனைவிட்டு வட பகுதி விவசாயிகள் பெரும் கவலையடைந்திருக்கிறார்கள். வெங்காயம் பயிராகியுள்ள இடங்களில் வெள்ளம் நிரம்பியிருக்கின்றது. இதனால் வெங்காயம் அழுகிவிடும் என அஞ்சுகிறார்கள். வரட்சியினால் நாசமான நெற்கதிர்கள் கால்நடைகளுக்காவது உதவும் என எதிர்பார்க்கப்பட்டதற்கு மாறாக மழை பெய்து அவற்றையும் பாதித்துள்ளது.

தொடர்ந்து வரட்சி நீடித்ததால் ஏற்படக்கூடிய நோய் பரவுதலை ஓரளவு பெய்த மழை தணித்துள்ளதாகத் கூறப்படுகிறது

மழை பெய்த இருதினங்களும் பஸ்சேவை சீராக நடைபெறவில்லை. பிரயாணிகள் கொட்டும் மழையில் பஸவண்டிகளை எதிர்பார்த்து நிற்கவேண்டியிருந்தனர்.

இரண்டுமாதகாலமாக நிலவிய கடும் வரட்சி சனி ஞாயிற்றுக்கிழமைகளில் நாட்டின் பலபகுதிகளிலும் பெய்த மழை காரணமாக நீங்கியது. சென்றவார இறுதியில் திருக்கோணமலை, யாழ்ப்பாணம், அம்பாந்தோட்டை, காலி, புத்தளம், அம்பாறை(5.10") அனுராதபுரம், பதுளை, மட்டக்களப்பு (2.05") கண்டி, குருநாகல், கேகாலை, மாத்தளை உட்பட பல இடங்களில் பெய்தது.

திருக்கோணமலையில் ஞாயிற்றுக்கிழமை 7.25 அங்குல மழை நேற்றுப் பெய்தது. யாழ்ப்பாணத்தில் 3.61 அங்குல மழையும் பெய்தது. வார இறுதியில் பெய்த மழை.காரணமாக புகையிரத, தந்தி சேவைகளும் சீர்குலைந்தன.

## கேள்விப்பத்திர அறிவித்தல்

பரந்தன் இரணைமடு மேற்கு ப. நோ. கூ. சங்கத்திற்கு இரு நெற்கிட்டங்கிகள் கட்டுவதற்கான கேள்விப் பத்திரங்கள் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்தும் பதிவு பெற்ற ஒப்பந்தகாரரிடமிருந்தும் 1965-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 25-ம் திகதி வியாழக்கிழமை நண்பகல் 12 மணிவரை எனது அலுவலகத்தில் ஏற்றுக் கொள்ளப்படும். இரு கட்டிடங்களுக்கும் தனித்தனி கேள்விப்பத்திரங்கள் அனுப்பப்பட வேண்டும்; கேள்விப்பத்திரங்கள் அனுப்பும் உறைகளின் இடதுபக்க மேல் மூலையில் "நெல் கிட்டங்கிக்கான கேள்விப்பத்திரம்" என எழுதப்பட்டிருத்தல் வேண்டும் யாழ்ப்பாணம் கூட்டுறவு மாகாண வங்கியின் பரந்தன் கிளையின் ஒவ்வொரு கட்டிடத்துக்கு ரூபா 50-00 கேள்விப்பத்திர வைப்புப் பணமாகக் கட்டப்பெற்ற பற்றுச் சீட்டு காண்பிப்பதன்பேரில், பரந்தன் தென் யாழ்ப்பாணம் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் 1965-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22-ம் திகதி காலை 10 மணிவரையும் கேள்விப்பத்திரப்படிவங்கள் பெற்றுக் கொள்ளலாம்.

கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் அனுப்பப்படல் வேண்டும். கட்டிடங்களின் மாதிரிப் படத்தையும், செலவின விபரத்தையும், எனது அலுவலகத்தில் பார்வையிடலாம். இவ்வேலையை ஏற்றுக் கொள்ளத் தகுதியுடையவர்கள் என்பதற்குப் போதிய அத்தாட்சி காண்பிப்பவர்களுக்கே இதற்குரிய பத்திரங்கள் வழங்கப்படும். தெரிவு செய்யப்பெற்ற கேள்விப்பத்திரக்காரர் தாம் ஒப்புக்கொண்ட ஒப்பந்தத் தொகையில் 5 வீதத்தை பிணைப்பணமாகக் கட்ட வேண்டும். கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்பெற்ற இரண்டு வாரங்களுக்குள் வேலையை ஏற்றுக்கொள்வதற்கான ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும்.

மேலதிக விபரங்களை தென்-யாழ்ப்பாணம் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

கூட்டுறவு அலுவலகம்,
பரந்தன்.
6-2-65.

(ஒப்பம்) மு. சின்னத்தம்பி,
தென்-யாழ்ப்பாணம் கூட்டுறவு
அபிவிருத்தி உதவி ஆணையாளர்.
1602

புதுடில்லி, பெப். 15

இந்தியாவின் ஆட்சிமொழிகுறித்து ஆச்சார்ய விநோபாஜி தெரிவித்திருந்த மூன்று யோசனைகளுக்கும் முதன்மந்திரிகள் அனைவரும் சம்மதம் தெரிவித்துள்ளனர் என்று இந்திய உள்துறை மந்திரி திரு. குல்ஸாரிலால் நந்தா அறிவித்துள்ளார், விநோபாஜியின் மூன்று அம்ச திட்டத்துக்குப் பெரும் ஆதரவு கிடைத்திருப்பதால் நாட்டில் அமைதி ஏற்பட வழி கிடைத்திருக்கிறதென்றும் திரு. நந்தா தெரிவித்தார். (1) வன்முறைச் செயல்கள் நிறுத்தப்படவேண்டும், (2) ஹிந்தி விரும்புபவர்கள்மீது ஆங்கிலம் திணிக்கப்படக் கூடாது. (3) ஆங்கிலம் விரும்புபவர்கள் மீது ஹிந்தி திணிக்கப்படக்கூடாது.

இவையே விநோபாஜியின் மூன்று யோசனைகளாகும்.

பிரதமமந்திரி திரு. லால்பகதூர் சாஸ்திரி மீண்டும் இன்று தமது மந்திரிகளுடன் தமிழ்நாட்டு நிலைமை பற்றி ஆலோசனை நடத்தினார். அப்போது விநோபாவுடன் தாம் நடத்திய சம்பாஷணை பற்றி உள்நாட்டு மந்திரி விளக்கியதுடன், அவரது யோசனையை அரசாங்கம் ஏற்கும் என விநோபாவிடம் தெரிவித்ததாகக் குறிப்பிட்டார்.

காங்கிரஸ் அக்கிராசனர் திரு. காமராஜ் இன்று சென்னையிலிருந்து டில்லி வந்தார். ராஜிநாமாச் செய்த மத்திய மந்திரிகளான திரு. சுப்ரமண்யம், திரு அழகேசன் ஆகியோரும் டில்லி வந்தனர்.

### நெல்லூரில் பொலிஸ் சுட்டது

இன்று நெல்லூர் ரயில் நிலையத்தை தீயிட முயன்ற ஹிந்தி எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது பொலிசார் சுட்டதில் ஒருவர் மாண்டதாக அறிவிக்கப்பட்டது. பொலிசார் அங்கு ரோந்து சுற்றி வருகின்றனர்.

### நந்தா திரும்பினார்

உண்ணாவிரதமிருக்கும் விநோபாஜியுடன் பேச்சுவார்த்தை நடத்தும்பொருட்டு வார்தா சென்ற இந்திய உள்துறை மந்திரி திரு. குல்ஸாரிலால் நந்தா இன்று புதுடில்லி திரும்பினார். திரு. நந்தா பத்திரிகைநிருபர்களுக்கு அளித்த பேட்டி ஒன்றில் இந்தியாவின் ஆட்சிமொழி குறித்து விநோபாஜியுடன் தாம் ஆலோசனை நடத்தியதாகவும், அவர் தெரிவித்திருந்த மூன்று அம்ச திட்டத்தையும் முதலமந்திரிகள் ஏற்றுவிட்டதாக விநோபாஜியிடம் கூறப்பட்டதாகவும் விநோபாஜி இது குறித்து மகிழ்ச்சி அடைந்ததாகவும் கூறினார்.

### கோரிக்கை

தமிழ் நாட்டிலும் மற்றைய பகுதிகளிலும் நடைபெற்ற எதிர்ப்பு கிளர்ச்சிகள் முடிவடைந்து இப்பொழுது அமைதிநிலவுவதால் உண்ணாவிரதத்தைக் கைவிடுமாறு தாம் விநோபாஜியைக் கேட்டுக்கொண்டதாகவும் திரு. நந்தா தெரிவித்தார்.

### முதன்மந்திரிகள் உறுதிப்படுத்தினர்

விநோபாஜியின் மூன்று அம்ச திட்டத்தையும் தாங்கள் முழுவதுமாக ஏற்றுக்கொண்டு விட்டதாக பல முதன்மந்திரிகள் விநோபாஜிக்கு உறுதிப்படுத்தியுள்ளனர். கேரள கவர்னர் திரு. வி. வி. கிரி பாவேக்கு அனுப்பியுள்ள தந்தியில் தாம், 3 அம்சத் திட்டத்தை ஏற்பதாக அறிவித்துள்ளார்.

(6ம் பக்கம் பார்க்க)

## 'ஈழநாடு' சூருவளி கஷ்ட நிவாரண நிதி

யாழ்ப்பாணம், செவ்.

ஈழநாடு சூருவளி கஷ்ட நிவாரண நிதிக்கு இதுவரை பணமாகவும் பொருளாகவும் 25,778 ரூபா 21 சதம் சேர்ந்துள்ளது. யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியைச் சேர்ந்த டாக்டர் வி. சி. பசுபதி இரண்டாம் முறையாக 100 ரூபா வழங்கியுள்ளார்.

நேற்றுப் பிற்பகல் கிடைத்த வசூல் விபரம் வருமாறு:

| | |
|---|---|
| வி. தம்பிஐயா | 5-00 |
| டாக்டர் வி. சி. பசுபதி | 100-00 |

## உண்ணாவிரதம் இன்று கைவிடப்படலாம்

வார்தா, பெப் 15

இந்தியாவின் பல பகுதிகளிலும் நடைபெற்ற ஆட்சிமொழி கிளர்ச்சி காரணமாக கடந்த வெள்ளிக்கிழமை உண்ணாவிரதம் ஆரம்பித்த பூதான இயக்கத்தலைவர் ஆச்சார்ய விநோபாபாவே நாளை செவ்வாய்க்கிழமை தமது உண்ணாவிரதத்தை கைவிடுவார் என நம்பப்படுகிறது.

கிளர்ச்சி நடைபெற்ற பகுதிகளில் இப்பொழுது அமைதி நிலவுவதால், விநோபாஜி தமது உண்ணாவிரதத்தை இன்று கைவிடலாம்' என்று முன்னர் வந்த செய்திகள் கூறின.

ஆனால், தமிழ் நாட்டில் நடப்பதை விநோபாஜி இன்றும் பொறுத்திருந்து பார்ப்பார் என்றும் நாளைய தினம் அவர் தமது உண்ணாவிரதத்தைக் கைவிடலாம் என்றும் சர்வோதய வட்டாரங்கள் தெரிவித்தன.

நாளையதினம், காலைப்பத்திரிகைகளையும்வானொலிச் செய்திகளையும் அறிந்த பிறகே விநோபாஜி, உண்ணாவிரதத்தைக் கைவிடுவாராம்.

### மணிவாக்கு

மனச்சோர்வடைய வேண்டாம். தெய்வத்துக்கு உங்களைப் பூரணமாக அர்ப்பணித்து விடுதலையடையுங்கள். சந்தேகமோ பயமோ தேவையில்லை. தெய்வம் உங்கள் உள்ளேயே உள்ளது. எப்போதும் அதை நினையுங்கள்.

— சுவாமி ராமதாஸ்


# ஈழநாடு

ஈழ நாடு

EELA NADU National Tamil Daily. Post Box: 49, Jaffna. Telegrams: 'EELANADU' Jaffna Phone: 389.

யாழ்ப்பாணம் குரோதி ஆண்டு மாசி மீ 5 உ (16-2-65)


## வெளியார் தலையீடு?

இலங்கையில் இப்போது சீனர்கள் அதிகம் நடமாடுவதாயும், வருகிற பொதுத்தேர்தலில் அவர்கள் தலையிடுவதாகவும் பல பத்திரிகைகளில் புகார்கள் கூறப்படுகின்றன. சென்ற பொதுத் தேர்தலின்போது அமெரிக்கர் மீதும் இதே போன்ற குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டன. உலக அரசியல் அரங்கிலே துரதிருஷ்டவசமாக அமெரிக்காவுக்கும் சீனத்துக்கும் பூசல்கள் அதிகரித்துவருவதாலும் அவற்றை சுமுகமாகத்தீர்க்க எவ்வித முயற்சியும் செய்யப்படாததாலும் இவ்விரு வல்லரசுகளும், தங்கள் செல்வாக்கை இலங்கை போன்ற நடுநிலைமை நாடுகளில் அதிகரித்துக்கொள்ள முயல்வதாயின் அது இயற்கையே. சீனமும் அமெரிக்காவும் இப்புகார்கள் குறித்து எவ்வித மறுப்பும் தெரிவிக்காதது குறிப்பிடத்தக்கது.

சமீப வருடங்களில் சீனம் நமக்குப் பல பல உதவிகளைச் செய்துவருகின்றது. நமக்கு அரிசித்தட்டுப்பாடும், ரப்பர் நெருக்கடியும் ஏற்பட்டிருந்த சமயத்தில் அமெரிக்கா சற்றே தாராளமனம் காட்டியிருப்பின் அன்று சீனத்துடன் இலங்கை அரிசி-ரப்பர் ஒப்பந்தம் செய்துகொள்ளவேண்டிய அவசியம் ஏற்பட்டிராது. அந்த ஒப்பந்தம் ஏற்பட்டபின் இலங்கை-சீன உறவுகள் அதிகம் நெருங்கி வருகின்றன.

இதே சமயம் அமெரிக்க உதவிகள் நமக்குப் படிப்படியாக நின்றுவிட்டன. கைப்பற்றிய பெட்ரோல் வர்த்தக ஸ்தாபன சொத்துக்களுக்கு இலங்கை இன்னும் நஷ்டஈடுகொடுக்க முடியாததால் தங்கள் தேசச் சட்டப்படி உதவிகளை நிறுத்தவேண்டி ஏற்பட்டுவிட்டதாக சமாதானம் சொல்லப்படுகின்றது. தங்கள் போட்டிவல்லரசான அமெரிக்கா சரியாகவோ தவறாகவோ நமக்கு உதவிகளை மறுத்துள்ள சமயத்தில் சீனம் அதிக உதவிகளை நமக்குக் கொடுத்து நம்மை தங்கள் பக்கம் சாய்த்துக்கொள்ள யத்சிகளை மிக ராஜதந்திரத்துடன் செய்கின்றது. சோழியன் குடுமி சும்மா ஆடாதுதான்.

இந்தத் தர்மசங்கடத்தில் இலங்கை என்ன செய்யவேண்டும்? எக்காரணத்தை முன்னிட்டும் தனது மேலான நடுநிலைமை மத்திய வழியைக் கைவிடக்கூடாது. சீனம், அமெரிக்கா உள்ளிட்டு எல்லா நாடுகளின் நட்புறவும் உதவியும் நமக்குத் தேவை. புதிதாக விடுதலையடைந்த இலங்கைக்குப் பொருளாதாரச் சங்கடங்கள் அதிகமுள்ளன. அதனால்தான் அமெரிக்காவுக்கு இன்னும் நஷ்டஈடு செலுத்த முடியாமலுள்ளது என்பதை விளக்கி, அமெரிக்காவின் தப்பெண்ணத்தை நீக்கவும், மீண்டும் அமெரிக்க உதவிகளைப் பெறவும் முயலவேண்டும். இதேசமயம் உலகிலேயே பெரிய வல்லரசான அமெரிக்கா, மிகச் சிறிய நாடான இலங்கையின்பால் அதிக தாராள மனம் காட்டி, கூடுமான உதவிகளை அளிக்க வேண்டும். இலங்கைப் பொதுமக்களின் அபிமானத்தை இழக்காமலிருக்க அதுவே வழி.

இது எப்படியாயினும், இலங்கையின் பொதுத்தேர்தலில் அந்நிய வல்லரசுகள் தலையிடுவது உண்மையாயின், அது நமது அரசியல் சுதந்திரத்துக்கே ஆபத்தாக முடியும். நம்மிடையே பல கட்சிகள் இருக்கலாம். போட்டிகள் தீவிரமாக இருக்கலாம். ஆனால் நம் உள்நாட்டு விஷயங்களிலே பிறர் தலையிடுவதை எக்காரணத்தை முன்னிட்டும் நாம் அனுமதிக்கக்கூடாது. உதவிகள் பெறுவதும், ஒப்பந்தங்கள் செய்துகொள்வதும் வேறு விஷயம். ஆனால் நமது அரசியல் சுதந்திரத்துக்கும், நடுநிலைமைக் கொள்கைக்கும் ஆபத்து ஏற்படுவதைப் பற்றி தேசாபிமானமுள்ள எல்லாக் கட்சிகளும் எச்சரிக்கையாக இருக்கவேண்டும்; இந்தப் புகார்கள் தேர்தல் பிரசாரமாகவும் இருக்கக்கூடும். எப்படியும் வெளியார் தலையீடு ஆபத்துகள் சாத்தியமேயாதலால் இதுகுறித்து எல்லாக் கட்சிகளும், சிறப்பாகக் 'காபந்து அரசாங்க'ப் பிரதமரும் அதிக கவனமாக இருந்து நடவடிக்கை எடுப்பதுடன் மக்களிடையே வளர்ந்துள்ள பீதிகளை நீக்கக் கடமைப்பட்டுள்ளனர்.

## ஆலய மகோற்சவம்

யாழ்ப்பாணம், திங்கள்

ஸ்ரீ நகுலாம்பிகா சமேத நகுலேஸ்வர ஆலய மகோற்சவம் 16ந் தேதி செவ்வாய்க்கிழமை பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 15 நாட்களுக்கு நடைபெறும். மார்ச் மாதம் முதலாந்தேதி திங்கட்கிழமை சிவராத்திரி இரவு விசேஷ ஆராதனைகளும் இன்னிசைக் கச்சேரிகளும் இரவு நான்கு வேளை அபிஷேக பூசைகளும் இடம்பெறும். மார்ச் 3ந் தேதி புதன்கிழமை அமாவாசை சமுத்திர தீர்த்தத்துடன் மகோற்சவமும் முடிவடையும்.

## லட்சார்ச்சனை

கொழும்பு, திங்கள்

கொழும்பு தட்டாரத்தெரு ஸ்ரீசிவசுப்பிரமணிய சுவாமி கோவிலில் இம்மாதம் 17ந் தேதி தொடக்கம் 22ந் தேதி வரையும் லட்சார்ச்சனை விழா நடைபெறும்.

ஆசிரியருக்குக் கடிதங்கள்

## செய்திநேரத்தில் மாற்றம் ஏன்?

வானொலி நிகழ்ச்சிகளைப் பொறுத்தமட்டில் இலங்கையிலுள்ள தமிழ்ப் பேசும் மக்கள் குறிப்பாக இலங்கை இந்திய வானொலி நிகழ்ச்சிகளையே கேட்பதுண்டு. உலகச் செய்திகளை அறிவதிலும் இவ்விரு வானொலிகளையும் தான் நாம் நாடுகின்றோம். இலங்கை வானொலியின் பத்து நிமிட நேர செய்தியையும் இந்திய வானொலியின் பதினைந்து நிமிட நேர செய்தியையும் தினசரி கேட்கும் பல்லாயிரக் கணக்கானவர்களில் நானும் ஒருவன். இவ்விரு வானொலிகளிலும் இந்திய வானொலியின் செய்திநேரம் அதிகமாக விருப்பதால் உலகின் பல பகுதிச் செய்திகளையும் இதன் மூலம் நன்கு கேட்க முடிகின்றது.

கடந்த சிலவாரங்களாக இலங்கை வானொலியின் காலை செய்திநேரம் மாற்றப்பட்டிருப்பதால் பலருக்கும் ஏமாற்றமும் அதிருப்தியும் ஏற்பட்டுள்ளது. முன்னர் இலங்கை வானொலியின் காலைச் செய்தி நேரம் 7 மணிமுதல் 7-10 வரை இருந்தது. இந்திய வானொலியின் செய்திநேரம் காலை 7-15 ஆகும். இது எமக்கு பலவிதத்திலும் வசதியாகவிருந்தது: இலங்கை வானொலியின் செய்திகளைக் கேட்டு பின்னர் இந்தியச் செய்திகளைக் கேட்க இது வாய்ப்பளித்தது. ஆனால் இப்பொழுது இலங்கை வானொலியின் காலைச் செய்தி நேரம் 7-00 மணியிலிருந்து 7-15 க்கு மாற்றப்பட்டிருப்பதால் இலங்கை இந்திய வானொலிச் செய்திகளைத் தனித்தனியாக கேட்க முடியாமலிருக்கிறது.

மற்றைய நேரச் செய்திகளை விட காலைச் செய்திதான் முக்கியமாகவிருக்கிறது. இலங்கை வானொலியின் காலைச் செய்தி நேர மாற்றத்தால் எந்தச் செய்தியைக் கேட்பது எதைவிடுவது என்ற பிரச்னை இப்பொழுது எழுந்துள்ளது. இதன்விளைவாக நாம் காலையில் இந்தியச் செய்தியை மட்டுமே இப்பொழுது கேட்க முடிகிறது. இலங்கை வானொலி அதிகாரிகள் இதனைக் கருத்திற்கொண்டு காலைச்செய்தி நேரத்தை மாற்ற நடவடிக்கை எடுப்பார்களா?

ம. தே.

யாழ்ப்பாணம்.

## சமஷ்டி ஆட்சி

கடந்த ஒன்பது வருடமாகத் தமிழரசுக்கட்சியினர் மொழிக்கொள்கையை முன் வைத்தே வெற்றிபெற்று வந்துள்ளனர். இத்துடன் அவர்களது முக்கியமான மற்றொரு கொள்கை சமஷ்டி ஆட்சிமுறை.

ஒரு உபகண்டமென வருணிக்கப்பட்டு வரும் பாரத நாட்டில் உள்ளதும் சமஷ்டி ஆட்சி முறையே. இச்சமஷ்டி ஆட்சி முறையிலே சில கோடி மக்களைக் கொண்டு தமிழ் நாடும் ஒரு பகுதியாகும்.

பாரெங்கும் போற்றிய பாரத நாட்டிலே இன்று நிகழ்வதென்ன? ஹிந்தி ஆட்சிமொழியானதால் மக்களிடையே கொந்தளிப்பும், விரக்தி மனப்பான்மையும் தோன்றியுள்ளது தற்கொலைகளினாலும், பொலிசாரின் துப்பாக்கிப் பிரயோகத்தினாலும் இதுவரை ஐம்பதிற்கும் அதிகமானோர் மாண்டுவிட்டனர். அரசாங்கத்தின் உடைமைகள் நாசமாக்கப்பட்டுவிட்டன. அங்கு அமைதியின்மையும் பீதியும் தோன்றியுள்ளது. ஆத்திரங்கொண்ட மக்கள் கூட்டத்தினை அடக்க இராணுவமும் அழைக்கப்பட்டுள்ளது.

இது எதனைக் காட்டுகின்றது என்றால், சமஷ்டி ஆட்சி முறையெனினும், மத்திய அரசாங்கம் நினைத்தால் மாநில அரசாங்கத்தைக் கட்டுப்படுத்த முடியுமென்பதையே.

எனவே இலங்கையிலும் இதே நிலைமை வராது என்பதற்கு என்ன அத்தாட்சி இருக்கிறது. ஹிந்தி பேசாத மக்கள் இந்தியாவில் ஏறக்குறையமூன்றில் இரண்டு பங்கிற்குமேல் உள்ளனர். அவர்களால்வெற்றி பெறவும் முடியும் ஆனால் இலங்கையில்சிங்களம்பேசாதமக்கள் ஏறத்தாள ஐந்திலொரு பங்கினரே. எனவே தமிழர் தமது உரிமையைப் பெறுவதானால் சிங்கள மக்களின் பூரண சம்மதம் பெற்றேயாக வேண்டுமென்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

எமக்குஉரிமைதர இணங்கும் சிங்களமக்கள்யார்? யு. என். பி. கட்சியையோ, அன்றி எம். ஈ. பி, ஜே. வி. பி. கட்சிகளைச் சேர்ந்தவர்களோ அல்லவென்பது அவர்களது தேர்தல் விஞ்ஞாபனம்மட்டுமல்லாது, கடந்தகாலச் சரித்திரமே சான்று. தமிழ் மக்களின் நலவுரிமைகளில் அக்கறை கொண்டு அவர்களுடன் உடனிருந்து வாழ நேசக்கரம் நீட்டி அழைப்பவர்கள் அன்றும் இன்றும் இடதுசாரிகளேயாவர். இதை யாவது உணர்ந்து தமிழ் மக்கள் அவர்களை ஆதரிக்கலாமல்லவா!

பா. பொ. அழகரத்தினம்

கோண்டாவில் மேற்கு.

## திருவள்ளுவர் திருநாள்

யாழ்ப்பாணம், செவ்.

வடமாநில சைவ இளைஞர் மாமன்றத்தின் சார்பில் நாயன்மார்கட்டு ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்மன் கோயில் மண்டபத்தில் வியாழக் கிழமை மாலை திருவள்ளுவர் திருநாள் நடைபெறும். திரு. க. சொக்கலிங்கம், சி. சிவரத்தினம், க. பரநிருபசிங்கம் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

வியாழக்கிழமை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் திரு. த. முத்துசாமிப்பிள்ளை தலைமையில் நிகழும். இந்து மகளிர் கல்லூரி உப அதிபர் திருமதி இ. வைத்தியலிங்கம் திரு க. சிவராமலிங்கம் திரு வை. ஏரம்பமூர்த்தி ஆகியோர் சொற்பொழிவுகள் நிகழ்த்துவர்.

திருவள்ளுவர் திருநாள் நாவலர் பாடசாலையில் வியாழக்கிழமை நிகழும். விசேட பூசை ஆராதனையும், சொற்பொழிவுகளும் நடைபெறும்.

## பஸ் சேவை விஸ்தரிக்கப்படுமா?

பருத்தித்துறை, திங்கள்

வடமராட்சி கிழக்கைச்சேர்ந்த மருதங்கேணியில் இருந்து ஆழியவளை, உடுதுறை வரை பருத்தித்துறை-தாளையடி பஸ் சேவை விரைவில் நீடிக்கப்படவிருப்பதாகத் தெரிகிறது.

மருதங்கேணியில் இறங்கி இதுவரை மேற்படி கிராமங்களுக்கு நடந்துசெல்லும் மக்களின் குறையை பருத்தித்துறை நகரசபையின் தலைவர் வடபிரதேச இ. போ. ச. அதிகாரிகட்கு எடுத்துக்கூறியதன் பேரில் பருத்தித்துறை-தாளையடி பஸ சேவையை விஸ்தரிக்க அவர் இணக்கம் தெரிவித்ததுடன் விரைவில் நடவடிக்கை எடுக்கவும் உறுதி அளித்துள்ளாராம்

(5-ம் கலத் தொடர்ச்சி)

நீதி விளங்குக உலகமெல்லாம்!

* * *

வானவனை வானவர்க்கும் மேலானானை
வணங்குமடியார் மனத்துள் மருவிப் புக்க,
தேனவனைத் தேவர்தொழு கழலான் தன்னைச்
செங்குணங்கள் பலவாகி நின்ற வென்றிக்
கோனவனைக் கொல்லை விடையேற்றி னானைக்
குழல் முழவம் இயம்பக்கூத் தாடவல்ல,
கானவனைக் கற்குடியில் விழுமியானைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டேன் நானே.

— அப்பர் சுவாமிகள்

## ஐயாறன் எழுதுவது

யாழ்ப்பாணத்திலே சென்ற மூன்று நாட்களாக ஓயாத மழை. சூரியனே தலைகாட்டவில்லை. வருணனின் தர்பார் தான். பார்த்தால் ஐப்பசி மாத அடைமழை போலுள்ளது. மரம், செடி, கொடிகளெல்லாம் புத்துயிர் பெற்றுள்ளன.

பலமாதமாக இங்கு மழையில்லாமல் பல இடங்களில் வரட்சியால் கிணறுகள் வற்றிப்போயின. குடிநீர்ப்பஞ்சம் ஏற்பட்டுவிடுமோ என்று நம்மில் பலரும் பயந்தோம். யாழ்ப்பாண குடாநாடு பாலைவனமாகிவிடுமோ என்றும் அஞ்சினோம் 'அஞ்சேல்' என்று அருள்செய்வதுபோல் இந்த மழையும் வந்துள்ளது.

* * *

ஆனால் இது கூடாதென்றும் மாடுகளுக்கு வைக்கோலும் கூடக் கிடைக்காமல் போய்விடுமென்றும் ஓர் அன்பர் காலையில் வந்து சொன்னார். புதிதாக நட்டபுகையிலைக்கன்றுகளுக்கு இந்த மழை கெடுதலாம் வயலில் விதைத்தனெல்லு, பயறு, தானியங்களை மழை அடித்துக்கொண்டு போய்விடுமென்றும் வேறொரு அன்பர் முறையிட்டார். என்ன செய்யலாம்?

வராத மழையை வருவிக்கவோ, வந்த மழையைத்தடுத்து நிறுத்தவோ நம்மில் யாருக்கும் சக்தி யுண்டா? 'வருவது வரட்டும் எல்லாம் நன்மைக்கே' என்ற நம்பிக்கை மனப்பான்மையுடன் இருப்பதைததவிர நாம் வேறென்ன செய்யமுடியும்?

என்றுமில்லாதபடி பயங்கர சூறாவளி அடித்தது. பலத்த சேதங்கள் ஏற்பட்டன. என்றாலும் அதற்கும் தப்பி நம்மில் பலரும் வாழ்ந்துவருகிறோம். கருணைக்கடலான தெய்வம் நம்மைக் கைவிடுவாரா? காக்கக் கடவிய நீ காவாதிருந்தக்கால் யார்க்குப் பரமாம் அறுமுகவா!

* * *

நீதி அரசர் ஸ்ரீஸ்கந்தராஜாவுக்குப் பெரிய கண்டம் ஏற்பட்டு அவர் அதிலிருந்து தப்பியது ஒரு பெரிய அதிசயம். கொழும்பிலே அவர் வீட்டிலிருந்து காரை ஓட்டிச்செல்லுகையில் திடீரென் ஒரு பெரிய மரம் அவர் காரை நசுக்கிப் பெரும் சேதமேற்பட்டதைப் படத்தில் பார்த்தேன். உள்ளேயிருந்து காரை ஓட்டிய அவர் உயிர்தப்பியது நம்பமுடியவில்லை. வந்த எமனை விரட்டிவிட்டார் அவர் வழிபடும் முருகன். அவர் நீடூழி வாழ்க!

கொழும்பு தட்டாரத்தெருவில் கோயில்கொண்டுள்ள ஸ்ரீ சிவசுப்பிரமணியப் பெருமானிடம்தான் ஸ்ரீஸ்கந்தராஜாவுக்கு அதிக ஈடுபாடு. அக்கோயில் வாசலில் அவர் தினசரி வழிபடுவதைப் பலரும் காணலாம். அக்கோவிலில் நாளை புதன்கிழமை முதல் 6 நாட்களுக்கு லட்சார்ச்சனை, லட்ச ஹோம மகாயாகம் விசேஷமாகப் பொது உபயத்தில் நடைபெறப் போவதாக கோவில் தர்மகர்த்தாக்கள் அறிவிக்கின்றனர்.

குறைவிலாது உயிர்கள் வாழ்வதற்காக வான் முகில் வழாது பெய்க, மலிவளம் சுரக்க, மன்னன் கோன்முறை அரசுசெய்க, நான்மறை அறங்கள் ஓங்க, நற்றவம் வேள்வி மல்க, மேன்மைகொள் சைவ

(4-ம் கலம் பார்க்க)

"சீனஎல்லைகள் தாக்கப்படாதவரை

# சீனு, இந்தியாவுக்கிடையே யுத்தம் மூளாது"

## மா-ஸே-துங் உறுதி

ஹம்பர்க், பெப். 15

இந்தியாவுக்கும் சீனவுக்குமிடையே சச்சரவோ அல்லது முரண்பாடோ இல்லை என்று சீனத் தலைவர் மா-சே-துங் தெரிவித்துள்ளார்.

பத்திரிகை நிருபர் ஒருவருக்கு அளித்த பேட்டியொன்றில்தான் அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இந்த விபரங்கள் இங்கு நாளை செவ்வாய்க்கிழமை வெளியாகும் "ஸ்ரேர்ஸ்ரேன்" என்ற சஞ்சிகையில் இடம் பெறவிருக்கிறது.

"கம்யூனிஸ்ட் சீனவின் முன்னணி எல்லைகளில் இந்தியத் துருப்புகள் ஊடுருவல்செய்யவில்லை. ஆகையினால் இந்தியாவுக்கும் சீனவுக்குமிடையே யுத்தம் மூளக்கூடிய அறிகுறிகள் எதுவுமில்லை" என்றும் அவர் தெரிவித்தார்.

"சீனவின் முன்னணி எல்லைகளுக்கு வெளியே சீனத் துருப்பினர் எவருமில்லை. தனது எல்லை தாக்கப்படாதவரை எவரையும் தாக்கும் எண்ணமும் சீனவுக்குக்கிடையாது" என்றும் மா-சே-துங் குறிப்பிட்டார்.

சீனு தாக்கப்படாதவரை அமெரிக்காவுக்கும் சீனவுக்குமிடையே வியட்னும் நெருக்கடி குறித்து யுத்தம் ஒன்றும் ஏற்படமாட்டாதென்றும் நம்பிக்கை தெரிவித்த மா-சே-துங் யுத்தத்தில் சீனவுக்கு விருப்பமில்லை என்றும் கூறினர்.

தமது உடல்நிலை குறித்து அவர் தெரிவிக்கையில், விரைவில் தாம் இறப்பது உறுதி என்றும் கடவுளைச் சந்திக்க தாம் மிக்க உறுதிகொண்டிருப்பதாகவும் கூறினர்.

# ஜோர்டான் பிரதமர் ராஜினமா

அம்மான், பெப். 14

ஜோர்ட்டான் பிரதமர் தமது பதவியை ராஜினமாச் செய்துள்ளார். உடல்நிலை காரணமாகவே இவர் ராஜினமாச் செய்துவிட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. புதிய அரசாங்கமொன்று அமைக்கப்பட்டு விட்டதாக கடைசியாக வந்த செய்தியொன்று கூறுகிறது.

# "மாணவர்களை விடுதலை செய்க"

சாவகச்சேரி, திங்கள்

"தமிழகத்தில் ஹிந்தியை கட்டாயமாகத் திணிப்பதை எதிர்த்து தீக்குளித்து தங்கள் உயிரைத் தாங்களே அர்ப்பணித்தவர்களும், பொலிசாரின் துப்பாக்கிச்சூட்டுக்குப் பலியானவர்களும் தங்கள் மனப்பூர்வமான அதிருப்தியை அரசாங்கத்திற்குத் தெளிவாக உணர்த்திவிட்டார்கள். இனி சிந்தித்துச் செயலாற்றும் பொருட்டு ஆட்சியாளர்களுக்கு அவகாசம் கொடுத்து மாணவர்கள் தங்கள் கிளர்ச்சியை நிறுத்திவைத்தமை சாலவும் பொருந்தும். அதே சமயம் ஹிந்தி திணிப்பால் பாதிக்கப்படுகின்ற மாணவர்கள் தங்கள் நிலையை உணர்த்துவதற்கு நடத்திய ஆர்ப்பாட்டச் சம்பவங்களின்போது நடைபெற்ற துப்பாக்கிச்சூடு தேவையற்றது. கண்டனத்திற்குரியது. இது குறித்து முழு நீதி விசாரணை நடாத்த வேண்டியது தமிழ்நாட்டு அரசாங்கத்தின் முக்கியபொறுப்பு. அதுமாத்திரமின்றி மொழிக் கிளர்ச்சிசம்பந்தமாக கைதான மாணவர்களையும் உடனடியாக தமிழ்நாட்டரசாங்கம் விடுதலை செய்யவேண்டும்."

மேற்படி தீர்மானம் நேற்றுக்காலை நடைபெற்ற தென்மராட்சி இளந்தமிழ்மன்ற செயற்குழுவினரின் அவசரக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது. கூட்ட அரம்பத்தில் உயிர்நீத்த இளைஞர்களுக்காக அனுதாபம் தெரிவிக்கப்பட்டது.

இந்த தீர்மானத்தை இலங்கையில் உள்ள இந்திய தூதரகத்தினர் மூலம் தமிழக அரசாங்கத்திற்கு அனுப்பவைப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

# பயிர்ச்செய்கை சேதம்

கோண்டாவில், திங்கள்

நேற்றும் இன்றும் தொடர்ந்து பெய்த மழையினுல் அதிக பணத்தை விரயஞ் செய்து உற்பத்தி செய்த பயிர்களான வெண்காயம், புகையிலை ஆகியன பலத்த சேதத்துக்குள்ளாகி விட்டன.

# இராமகிருஷ்ண ஜெயந்தி

கண்டி, திங்கள்

இராமகிருஷ்ண ஜெயந்தி தென்னக்கும்பரவில் உள்ள சச்சிதானந்த தபோவனத்தில் 18-ந் திகதி வியாழக்கிழமை மாலை 6 மணிக்கு சுவாமி சச்சிதானந்தாவின் தலைமையில் கண்டி திவ்வியஜீவன சங்கத்தினரால் கொண்டாடப்படும். அன்று விசேஷ பூசைகளும், அறிவுரைகளும், துதிப்பாடல்களும் இடம்பெறும்.

# இலங்கைக்கு வடவியட்னும் அரிசி

## அடுத்தவாரம் வந்து சேரும்

கொழும்பு, திங்கள்

அடுத்த வாரத்தில் வடக்கு வியட்னுமிலிருந்து 11,000 தொன் அரிசி இலங்கைக்கு வந்துசேரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இலங்கையில் அரிசிக்கு ஏற்பட்ட நெருக்கடியைத் தவிர்க்கும் பொருட்டு இலங்கை விடுத்திருந்த கோரிக்கைக்கிணங்கவே வடக்கு வியட்னும் இங்கு அரிசி அனுப்புகின்றது.

11,000 தொன் அரிசி அனுப்புமாறு வடக்கு வியட்னுமை இலங்கை கேட்டிருந்தது.

**பாக். அரிசி**

பாகிஸ்தானிலிருந்தும் இலங்கைக்கு அரிசி வந்துசேரவிருக்கின்றது. சுமார் 60,000 தொன் அரிசி பாகிஸ்தானிலிருந்து இந்த வாரம் இங்கு வரும்.

**பர்மா அரிசி**

அண்மையில் "இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஏற்பட்ட சூறுவளியினுல் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பர்மா அன்பளிப்பாக அனுப்பிய 100 தொன் அரிசி இன்று இலங்கை வந்து சேர்ந்தது.

நெடுந்தீவில்

# படகு சேவை இல்லை

## தபால் விநியோகம் நான்கு நாட்களாக தடைப்பட்டது

நெடுந்தீவு, ஞாயிறு

ஊர்காவற்றுறைக்கும் நெடுந்தீவுக்குமிடையே நடைபெற்று வந்த படகுச் சேவைகள் தற்பொழுது தடைப்பட்டிருப்பதால் பொதுமக்கள் பெரிதும் கஷ்டம் அனுபவிக்கின்றனர்.

படகுச் சேவைகள் பாதிக்கப்பட்டிருப்பதால் கடந்த நான்கு தினங்களாக தபால் விநியோகம் நடைபெறவில்லையென்றுக் ஆசிரியர்களும் மற்றும் அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்கும் இதுவரை சம்பள முற்பணம் வழங்கப்படவில்லையென்றும் அறிவிக்கப்படுகிறது.

ஊர்காவற்றுறைக்கும் நெடுந்தீவுக்குமிடையே மூன்று படகுகள் சேவையில் ஈடுபட்டிருந்தன. ஆனல் இவற்றில் ஒன்று பல மாதங்களுக்கு முன்பே பழுதடைந்துவிட்டது. மற்ற இரு படகுகளும் பின்னர் சேவையாற்றி வந்தபோதிலும் கடந்த ஒரு வார காலமாக ஒரு படகும் இயங்கமுடியாத நிலையில் இருக்கிறது. இந்தப் படகுகளை பொதுமராமத்து பகுதியின் பொறுப்பில் இருப்பது குறிப்பிடத்தக்கது.

தற்பொழுது தனிப்பட்டவர்களின் படகுகள், இப்பகுதியில் சேவையிலீடுபட்டுவந்த போதிலும் தினசரி உத்தியோகம் பார்க்கச் செல்பவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

# ஜோர்டானின் புதிய அரசாங்கம்

அம்மான் பெப். 14

ஜோர்டான் பிரதமர் திரு. பக்ஜட் அல்— தல்ஹவுண்ட், உடல்நிலை காரணமாக தமது பதவியை ராஜினமா செய்ததைத் தொடர்ந்து திரு. வசிவ் அல்— தெல் தலைமையில் புதிய அரசாங்கமொன்று அமைக்கப்பட்டுள்ளது.

புதிய பிரதமர் அல்—தெல் 1962 ஜனவரி முதல் 1963 மார்ச் வரை பிரதமராகவிருந்தார்.

# இடமாற்றங்கள்

வவனியா, திங்கள்

வவனியா நீர்ப்பாசன இலாகாவைச் சேர்ந்த திரு. எம். எஸ். ஸ்ரீகாந்தன் புத்தளம் நீர்ப்பாசன இலாகாவுக்கு மாற்றப்பட்டுள்ளார்.

∴ ∴ ∴

வவனியா மாவட்ட விவசாய விஸ்தரிப்பு அதிபர் திரு. க. சதாசிவம் வவனியாவிலிருந்து திருமலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

∴ ∴ ∴

வவனியா வட்டார வித்தியாதரிசி திரு. எஸ். சண்முகநாதன் நல்லூர் வட்டார வித்தியாதரிசியாக இடமாற்றமாகியுள்ளார்.

# "நிலைமையை நன்குஆராய்ந்து சிந்தித்துவாக்களிக்கவேண்டும்"

சாவகச்சேரி, திங்கள்

"தமிழ் மக்களின் உரிமைகள் அனைத்தும் ஒன்றன்பின் ஒன்ருகப் பறிக்கப்படுகின்ற சமயத்திலே ஐக்கிய தேசியக் கட்சியுடன் கூட்டுச் சேர்ந்து ஒத்துழைத்தவர்கள் இன்று எங்களை அனுப்புங்கள். மூன்று வருடத்தில் உரிமை பெற்றுத் தருகிறேம் என்று கூறுவதில் எந்தவித உண்மையும் உண்டா என்று ஆற்றல் படைத்த தமிழ்மக்கள் சிந்தித்து இத்தேர்தலில் பணியாற்ற வேண்டும்" என்று விடத்தற்பளை வீரபத்திரர் கோவிலுக்கருகாமையில் நடைபெற்ற தமிழரசுக்கட்சி தேர்தல் பிரசார கூட்டத்தில் சாவகச்சேரித் தொகுதி தமிழரசுக் கட்சி அபேட்சகர் திரு. வ. ந. நவரத்தினம் பேசுகையில் கூறினர். விடத்தற்பளை கிராம முன்னேற்றச் சங்கத் தலைவர் திரு. இ. வேலுப்பிள்ளை தலைமைவகித்தார். திரு. நவரத்தினம் தொடர்ந்து பேசியதாவது:-

"ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்துடன் சேர்ந்து இந்நாட்டின் முதுகெலும்பாக இயங்கிய மலைநாட்டுத் தமிழரின் வாக்குரிமைகளைப் பறிப்பதற்கு அந்த அரசாங்கம் முயன்ற போது அதற்கு ஒத்தாசை அளித்து சுமார் பத்து லட்சம் தமிழரின் வாக்குரிமையைப் பறிப்பதற்கு காரணமாக இருந்தவர்கள் இன்று மேடையில் நின்று பிரஜா உரிமைச் சட்டத்தில் தாங்கள் புத்திசாலித்தனமாக நடந்துகொண்டதாகவும் ஆனல் அரசாங்கம் சட்டத்தை அமுல் நடத்துவதில் தவருன வழியில் சென்றுவிட்டதாகவும் கூறுகிருர்கள். இப்படியானவர்களை பாராளுமன்றத்திற்கு அனுப்பினுல் மூன்று வருடத்திற்குள் எஞ்சியுள்ள தமிழ் இனமும் அழிந்துவிடும்.

கச்சாய் கிராம சபை உறுப்பினர் திரு. ஆ. கனகரத்தினம் பேசியதாவது:-

"மிகவும் இக்கட்டான நிலையிலுள்ள தமிழினம் தமது விடுதலைக்காக உழைக்கக்கூடிய ஒரு கட்சிக்கே வாக்களிக்கவேண்டும். தேர்தல் சமயம் மட்டும மக்கள் மத்தியிலே தோன்றுகின்ற அரசியல்வாதிகளை நம்பினுல் தமிழ் இனத்திற்கு எதிர்காலமில்லாத நிலையே ஏற்படும். தமிழ் இனத்திற்குத் தொண்டுசெய்யக்கூடிய ஒரே ஒரு கட்சி தமிழரசுக்கட்சியே. இன்றைய நிலையிலே தமிழர் சில சலுகைகளுக்காகத் தமது உரிமைகளை விட்டுக்கொடுத்தால் தமிழினம் மீளா அடிமையாக நேரிடும். அந்த நிலை ஏற்படா வண்ணம் தமிழினத்தின் உரிமைகளுக்காகவே தமிழரசுக் கட்சி போராடிவருகின்றது."

சாவகச்சேரி நகரசபைத் தலைவர் திரு. இ. டா. சிவகுரு, திரு. வி. வி. கந்தையா உட்பட பலர் பேசினர்.

# விவசாயிகளுக்கு நிவாரணமளிக்க கோரிக்கை

யாழ்ப்பாணம், செவ்.

"பல கோடிக்கணக்கான ருபாய்களை வருடாவருடம் இறக்குமதிக்காக செலவு செய்துவரும் அரசாங்கம் நெல்லு உற்பத்தியில் ஈடுபட்டிருக்கும் விவசாயிகள் கடும் வரட்சியினுல் பாதிக்கப்பட்டிருக்கும்பொழுது எந்தவித அக்கறையும் காட்டாமலிருப்பது உணவு உற்பத்திக்கு எந்தவித ஊக்கமும் அளிக்க தயாரில்லை என்பதை எடுத்து காட்டுகிறது.' இவ்வாறு யோகபுரத்தில் நடைபெற்ற விவசாயிகள்சங்க பொதுக் கூட்டத்தில் திரு. வி. ஏ. கந்தசாமி பேசும்பொழுது தெரிவித்தார். வவனிக்குள விவசாயிகள் சங்க தலைவர் திரு. இளையதம்பி கூட்டத்துக்கு தலைமைவகித்தார்.

"காலபோகவேளாண்மையில் ஈடுபட்டிருக்கும் விவசாயிகள் பெருமளவு பாதிக்கப்பட்டிருப்பதால் நெல்லை விதைத்து புல்லை அறுவடைசெய்யவேண்டிய துர்ப்பாக்கியநிலையில் இருக்கிருர்கள். அவர்களுக்கு உடனடியாக அரசாங்கம் நிவாரணஉதவி அளிக்காவிட்டால், அவர்கள் குடியேற்றப் பிரதேசங்களை விட்டு வெளியேறவேண்டிய அபாயம் ஏற்பட்டுள்ளது.

நெற்செய்கை பாதிக்கப்பட்டிருக்கும் இக்நேரத்தில் தோட்ட நிலங்களைப் பயிரிட முடியாத பரிதாபமான நிலையில் இருக்கிருர்கள். மிளகாய் கத்தரி, புகையிலை போன்றவை பயிரிடக்கூடிய விளைநிலங்களிலிருந்தும் நீர்ப்பாய்ச்சுவதற்கு கிணற்று வசதியில்லாமையால் விவசாயிகளுக்கு கஷ்டமான நிலை ஏற்பட்டுள்ளது. விவசாயத்தில் இருக்கக்கூடியவர்களுக்கு சகல உதவிகளையும் அளிப்பதன் மூலம்தான் இலங்கையில் உணவு உற்பத்தியில் சுய தேவையைப் பூர்த்திசெய்யவும் வெளிநாடுகளில் உணவு இறக்குமதிக்காக வெளிநாடுகளில் செலவுசெய்யும் பணத்தை இலங்கையின் தொழில்வளர்ச்சிக்காக பயன்படுததவும் முடியும் என அவர் மேலும் குறிப்பிட்டார்.

அடுத்து திருவாளர்கள் கதிரவேலு, எஸ். சந்திரன், க. சுப்பையா ஆகியோரும் பேசினுர்கள்.

பின்வரும் தீர்மானங்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

வவனிக்குள குடியேற்றப் பகுதிக்குகிணறுவெட்டுவதற்கு உடனடியாகஅரசாங்கம் உதவி செய்யவேண்டும்.

வரட்சியினுல் பாதிக்கப்பட்டிருக்கும் குடியேற்ற விவசாயிகள் காலபோக வேளாண்மையும் அழிந்து, சிறுபோக வேளாண்மையும் செய்யமுடியாத நிலையிலிருப்பதால் அரசாங்கம் அவர்களுக்கு நிவாரண உதவி வழங்கவேண்டும்.

# 'நாட்டு நலனில் அக்கறை கொள்க'

கொழும்பு, திங்கள்

எதிர்வரும் பொதுத் தேர்தலில் சுயேச்சையாளர்களாகப் போட்டியிடும் அங்கத்தவர்கள் பலர் சென்றவார இறுதியில் கூடி மகாநாடு ஒன்று நடத்தினர். அண்மைக் காலத்தில் இலங்கையில் பெருந்தொகையான சீனர்கள் நடமாடிவருவது குறித்தும், அரசாங்கம் இது குறித்து, எவ்வித நடவடிக்கையும் எடுக்காதது குறித்தும் கண்டனம் தெரிவிக்கப்பட்டது. சீனர்களின் நடமாட்டம் கட்டுப்படுத்தப்படாமல் இருப்பது வருந்தத்தக்கதென்றும் அது நாட்டுக்கு பேராபத்தைக் கொண்டுவரும் என்றும் இது விஷயமாக நாட்டுநலனில் அக்கறை கொண்டுள்ள அனைவரும் ஒற்றுமையாக நின்று இதனை எதிர்க்க வேண்டும் என்றும் அந்த மகாநாட்டின் சார்பாக வெளியிடப்பட்ட அறிக்கை யொன்றில் கோரப்பட்டுள்ளது.



# மாணவர் மலர்



## நள்ளிரவில் நடந்தது

— குமார் தனபால் —

அன்று அமாவாசைநாள். நான் யாழ்ப்பாணத்தில் இருக்கும் ஒரு படமாளிகையில் இரண்டாம் காட்சி சினிமா பார்த்துவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்தேன். முற்றவெளி மைதானத்துக்கு அருகில் இருக்கும் மணிக்கூண்டு கோபுரத்தை நெருங்கியதும் நிமிர்ந்து பார்த்தேன். சரியாக இரவு ஒன்றரைமணி. தெரு ஓரங்களில் உள்ள விளக்குகள் எல்லாம் ஒளிகுன்றி அழுதவடிந்து கொண்டிருந்தன. காட்சி முடிந்து என்னோடு கூடவந்தவர்கள் எல்லாம் தத்தம் வீதிகளுக்குத் திரும்பிக் கொண்டிருந்தார்கள். நான் தனியனுனேன். தன்னம் தனிமையில் தெருவில் நடக்கவே எனக்குப் பயமாக இருந்தது; ஏனென்ருல் நான் பார்த்த படம் ஒரு பயங்கரமான மர்மப்படம்.

ஏதாவது ஒரு சிறு சத்தம் கேட்டாலும் அதிர்ச்சியடைந்து திகிலுடன் திரும்பிப்பார்த்தபடி நடந்தேன். ஆரியகுளச் சந்தியால் திரும்பி குப்செற்ருேட்டினூடாகச் சென்று நரிக்குண்டை அடைந்தேன். அந்த ரோட்டில் விளக்குகளே இல்லாத ஒழுங்கை ஒன்றில் துணையப்போன நான் சற்றுத்திகைப்படைந்துநின்றேன். காரணம் தெருமுனையில் ஒரு முரட்டு மனிதன் கையில் ஒரு தடியுடன் நின்று கொண்டிருக்தான். ஒழுங்கைக்குள் நுனைவதானுல் அவனைக்கடந்துதான் செல்லவேண்டும். ஆனுல் அவனே கைத்தடியை அப்படியும் இப்படியும் ஆட்டியவாறு ஓரேநிலையில் நின்றுகொண்டிருந்தான்.

அவன் நின்று கொண்டிருக்கும் பக்கம் செல்லாமல் எதிர் வரிசை வீடுகள் பக்கமாக இருளில் மறைந்த வண்ணம் ஒழுங்கைக்குள் நழுவினேன். சிறிது தூரம் நடந்தபின்சற்று நின்று மெல்லத்திரும்பிப்பார்த்தேன். என்ன பயங்கரம்! அந்தமனிதன் என்னையே நோக்கி வந்து கொண்டிருந்தான். மெல்ல அடியெடுத்து நடந்துவந்தவன் நான் நிற்பதைக்கண்டதும் அவனும்நின்று முகத்தை வேறுபக்கம் திருப்பிக்கொண்டான். எனக்குக் கைகால் எல்லாம் நடுங்கத் தொடங்கிவிட்டன. நகன்றதை அந்தமனிதன் கவனித்துவிட்டானே, என்னவோ சற்று வேகமாகவே நடந்து வந்தான். அவன் நடைதள்ளாடியது. அடிக்கடி தன்கையில் இருந்த தடியை தரையில் ஊன்றித் தன்னை நிலைப்படுத்திக் கொண்டு நடப்பதுபோல இருந்தது. அவன் குடித்திருக்கிறுன் என்பதை அவன் நிலை விளக்கியது. குடிவெறியில் ஒருவேளை என்னை அவன் கொலைசெய்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்பதை எண்ணியதும் என் உயிர் போய்விட்டது போன்ற நிலை எனக்கு ஏற்பட்டது.

(அடுத்த இதழில் முடியும்)

## ராமகிருஷ்ணர்

— சிவராஜசிங்கம் —

உலகம் போற்றும் உத்தமர் ராமகிருஷ்ணபரமஹம்சர், கங்கை நதி பாயும் வங்கத் திருநாட்டில், ஹுக்ளி ஜில்லாவில் சுதிராம் சட்டர்ஜி என்பவருக்கும் சந்திரமணி தேவி என்னும் அம்மையாருக்கும் நான்காவது மகவாக அவதரித்தார்.

இவரது இளமைப் பெயர் கதாதரன் என்பதாகும். ஸ்ரீ ராமகிருஷ்ணர் பொறுமையும், வைராக்கியமும், பத்தியும் கொண்டவர்; உலக வாழ்க்கை இன்பங்களில் ஈடுபடாது எல்லாம் வல்ல இறையைக் காண்பதே பேரின்ப வாழ்வென எண்ணி வாழ்ந்தார்.

வேதாந்த வாழ்க்கை நடத்திய இந்த அருட் திலகர் 17-ம் திகதி மாசிமாதம் 1836ம் ஆண்டு பிறந்தார். தமது இளம் வயதிலேயே சாரதாமணி அம்மையார் என்பவரை மணந்தார். பல சீடர்களுக்கு ஞான உபதேசம் செய்த பரமஹம்சர் தன் வாழ்வின் இறுதிப் பகுதியில் நரேந்திரர் எனப் பெயருடையவரும் பின்னர் பரமஹம்சராலேயே விவேகானந்தரெனப் போற்றப்பட்டவருமாகிய விவேகானந்தரை தம்முடைய சீடராக அடைந்தார்.

இவர் எழுதிய உபதேசங்கள் உள்ளத்தைக் கொள்ளை கொள்வன. உலகுக்கு பயன் தருவன. உலகத்து மாந்தர் யாவரும் படிக்கவேண்டியன. இவர் 16-ம் திகதி ஆவணி மாதம் 1886-ம் ஆண்டு இறைவனடி சேர்ந்தார். அவர் உபதேசங்கள் நம் உள்ளத்தை தூய்மையாக்கவேண்டும்.

## ஏன் சிரிக்கின்றோம்?

—நல்லை அமிழ்தன்—

திரைப் படத்தில் சிரிப்புக் காட்சி பார்த்தாலும்; ஒரு விகடத் துணுக்கைப் படித்தாலும் நாம் சிரிக்கின்றோம். ஏன் தெரியுமா?

பார்த்த காட்சியை கண்கள் மூளைக்குத் தெரிவிக்கும்போது மூளை அதற் கேற்றாற்போல் இயங்கி ஒருவிதமான உணர்வின் சக்தியலைகளை உடலெங்கும் பரப்புகின்றது. இந்த உணர்வின் சக்தி அலைகள் பாய்வதால் அங்கங்களில் சிற்சில மாறுபாடுகள் ஏற்படுகின்றன. சிரிக்கும்போது கன்னங்களில் குழி விழுவதும் கண்கள் சுருங்குவதும் சத்தம் வெளிப்படுவதும் இந்தச் சக்தி அலைகளின் தூண்டுதல்தான்.

பெரியவர்களைவிட சிறு குழந்தைகள் அடிக்கடி சிரிக்கக் காரணம் சிறு குழந்தைகளின் ஊறும் உடலில் தேவைக்கு அதிகமான சக்தி இருப்பது தான்; போஷாக்கில் வளரும் குழந்தைகள், வறுமையில் வடும் குழந்தைகளைவிட அதிகமாகச் சிரிக்கின்றன.

## சித்தைச் சட்டை போதும்

—சுபத்திரா—

பட்டுச் சட்டை வேண்டாம்
பவுண் நகைகள் வேண்டாம்
சிட்டுப்போல திரிய
சீத்தைச்சட்டை போதும்.

●

பாலும் பழமும் வேண்டாம்
பட்டர் ஜாமும் வேண்டாம்
நாலு பேரைப் போல
நாலு சோறு போதும்.

●

எனது வயதுத் தம்பி
எதுவும் இன்றி வாட
எனக்குமட்டும் எல்லாம்
பெரிய அவமானம்.

## சிரிக்கவும் சிந்திக்கவும்

ஒருவர்: (பல நாட்கள் தங்கிய விருந்தாளியிடம்) வருஷத்துக்கு உங்கள் மனைவி பிள்ளைகள், நீங்களும் இருக்க வேண்டுமென்று ஆசைப்பட மாட்டார்களா?

விருந்தாளி: ஆம் உண்மை! அவர்களையும் இங்கேயே அழைத்துவிடுகிறேன்;

∴ ∴ ∴

ஆசிரியர்: கவிச்சக்கரவர்த்தி கம்பரின் நற்செயல் என்ன?

ஒரு மாணவன்: அவர்... சார்... கம்பர் ஒரு... அவர் செய்த வேலை நான் படும் பாடு!

வேறொரு மாணவன்: ஆம் சார். அந்த ராமாயணம் ரொம்ப ருசி!

எம். எல். விஜேந்தன்
மறைவன்புலம்
சாவகச்சேரி.

∴ ∴ ∴

ஒருவர்: ஏன்சார் அதிகாலையில் குழந்தையை அடிக்கிறீர்கள்?

மற்றவர்: வேறென்ன சடச்சட ஏதும் வாங்கிவா என்ருல் சுடச்சுட 'ஈழநாடு' பேப்பர் வாங்கி வந்திருக்கிறுன்!

∴ ∴ ∴

ஒரு குஞ்சு (தாய்க் கோழியிடம்): அம்மா நாங்கள் மொத்தம் எத்தனை பேர்?

தாய்க்கோழி: பத்துபேரைத்தான் என்னிடம் வைத்தார்கள், அதில் ஆறுபேரைக் கொத்திக் குடித்துவிட்டேன். நீங்கள் தான் மிச்சம்!

மா. சேவியர் பெர்ணுண்டோ
குருநகர்
யாழ்ப்பாணம்.

## விஞ்ஞானம் என்ருல் என்ன?

-ரொபர்ட் ஸ்டீவன்ஸன்-

விஞ்ஞானம் இடைக்காலத்தில் ஏற்பட்டதா? அல்லது பின்னர் வந்ததா என்பதை பல கோணங்களிலிருந்தும் பார்த்தாலும் அதற்கு விடை இப்பொழுது ஓரளவு தென்பட்டுவிட்டதென்று தயக்கமின்றிக் கூறிவிடலாம்.

கலிலியோ, நியூட்டன், பாரடே, மாக்ஸ்வெல், பிளாங்க் இவர்கள் கூறியவற்றில் இன்று உண்மையாகக் கொள்ளப்படுபவை பெரும்பாலும் ஒன்றும் இல்லை. இன்று நாம் கூறுபவை இன்னும் ஒரு நூற்றாண்டு கழித்து உண்மையாகக் கருதப்படும் என்று திண்ணமாக நம்பும் விஞ்ஞானிகளும் இன்று இல்லை.

''விஞ்ஞானம் என்பதை ஒரு சிந்தனை முறையாகக் கருதும் அளவுக்குத்தான் நாம் இன்று யாரையும் ஒரு விஞ்ஞானி என்று நியாயமாகக் கூறலாம். இவ்வகையில் பார்த்தால் இன்றைய விஞ்ஞானி பழங்கால அறிஞர்களின் நேர்வாரிசு ஆவார்'' இவ்வாறு கொலம்பியா பல்கலைக் கழகப் பேராசிரியர்கள் கூறுகிருர்கள்.

மனிதன் இன்று முன்னேற முன்னேறப் பழமை கழிந்து ஒழிந்து விட்டதாக நினைக்கிருன்; ''கலை, ஆட்சித்துறை, சமயம், ஒழுக்க நெறி, விஞ்ஞானம் என்ற எந்த துறையிலாகட்டும், நம் முன்னோர்கள் அத்தனை பேர்களுடைய ஒருமித்த முயற்சிகளையெல்லாம் காட்டிலும் நாம் புதிதாக, சிறப்பாக ஒன்றைக்கண்டு பிடித்துவிட்டோம் என்று எப்படியாவது உறுதியாக நினைத்துவிடவே நாம் அலைவதாகத் தோன்றுகிறது'' என்று பேராசிரியர்கள் எழுதுகிருர்கள்.

அதற்கு மாருக, நீண்டகாலமாக வழி வழியாக வரும் ஒரு மரபை எடுத்துக்காட்டுபவர்கள் நாம் என்று நினைப்பதே சாலப்பொருத்தமாக இருக்கும் புதிய மரபு ஒன்றைப் படைப்பவர்கள் என்று நினைத்துக் கொள்வது அல்ல என்கிருர்கள் பேராசிரியர்கள்.

''எத்தனையோ காரியங்களிற் போலவே விஞ்ஞானத்திலும் நாம் முன்னோர் பேரறிவை ஆதாரமாக வைத்தே முன்னேறி வருகிறோம்'' என்கிருர்கள் அவர்கள். ஆகையினுல் விஞ்ஞானம் அக்காலத்தில் தோன்றியது என்பது புலனுகிறதல்லவா?

## மூளைக்கு வேலை

கடந்தவாரம் இப்பகுதியில் கேட்கப்பட்ட ஐந்து கேள்விகளுக்கும் பலர் பலவிதமாக விடையெழுதியிருந்தனர், முதலில் அந்தக் கேள்விகளின் விடைகளைக் கவனிப்போம். (A) மகாத்மாகாந்தி—பாக்கெட் கடிகாரம், (B) சேம்பர்லேன்—குடை (C) ஜவஹர்லால்நேரு—ரோஜா, (D) சர்ச்சில்—சுருட்டு. (E) ஹிட்லர்—கறுக்குமீசை.

ஐந்து கேள்விகளுக்கும் முழுதும் சரியாக விடையெழுதி விசேஷ பாராட்டுதல்களைப் பெறுபவர்களின் பெயர்கள் வருமாறு:-

க. நாகேந்திரராஜா, கந்தர்மடம்; த. சாந்தாதேவி, த. கருணாவதி, யாழ்ப்பாணம்; சோ. கலாவதி, வண்ணார்பண்ணை; அ. கனகசூரியர், ஊரெழுமேற்கு; க. கந்தசாமி, குப்பிழான்; க. விஜயவேல், வட்டுக்கோட்டை மேற்கு; ஆர். வைத்தீஸ்வரன், யாழ்ப்பாணம்; வி. சுந்தரராஜன், கரவெட்டி; ஜெ. ஜனார்த்தனன் இராமலிங்கம், மீரா ஜெபரட்ணராஜா, வண்ணார்பண்ணை; சபா புஷ்பநாதன், சுன்னாகம்; இரா. தர்மலிங்கம், கண்டிவீதி, குருநாகலை; சு. செல்வசோதி, வல்வெட்டி; க. சேகர், மாங்குளம்; சோ. விஜயாம்பாள், கொக்குவில் கிழக்கு; சி. நவநீதன், காங்கேசன்துறை; இ. பூலோகசிங்கம், ஏழாலைமேற்கு; இ. ஞானபண்டிதன், தொண்டமானாறு; க. இ. கந்தையா, கமலாதேவி கந்தையா, கருணாநிதி கந்தையா, க. பாலசுப்பிரமணியம், சரவணைகிழக்கு; ச. மனோகரன், சண்டிலுப்பாய்; ஐ. வசந்தநாதன், வேலணைகிழக்கு; க. சிவசந்திரன், மானிப்பாய்மேற்கு.

ஒரு பிழையுடன் விடையெழுதியவர்களின் பெயர்கள் வருமாறு:-

மு. கருணாநிதி, ஏழாலைமேற்கு; சரோஜா, இடைக்காடு; பத்மா, இடைக்காடு; சத்தியேஸ்வரி கனகசபை, மானிப்பாய் கிழக்கு: மு. வீரசிங்கம், சாவகச்சேரி; கா. கந்தசாமி, யோகபுரம்; வி. கோபாலசுந்தரம், அரியாலை; உ. சுப்பிரமணியம், யாழ்ப்பாணம்; மு. சச்சிதானந்தன், சரசாலை மேற்கு; சுந்தரி வேலாயுதம், வியாபாரிமூலை; க. தெய்வேந்திரன், மீசாலை; ஜெயராணி சபாபதிப்பிள்ளை, மல்லாகம்; ஓ. அண்ணாமலை, யாழ்ப்பாணம்! கா. சதானந்தசர்மா, சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி; வை. சிவரத்தினம், காங்கேசன்துறை; க. சுபத்திரா, விமன்காமம்; இரா. பாஸ்கரன், கோண்டாவில் வடக்கு; வே. ரவீந்திரன, அல்வாய்தெற்கு; சி. ஆனந்தன், சாவகச்சேரி; தெ. சந்திரகுமாரன், மல்லாகம்; எஸ். சண்முகராஜா, காரைநகர்; மு. ஜெயசோதி, தங்கோடை; பொன் நித்தியானந்தம், சாவகச்சேரி; சாயா, வண்ணார்பண்ணை; பா. பாலேஸ்வரி, யாழ்ப்பாணம்; ந. இன்பராணி, அரியாலை; சி. சிவயோகன், கரவெட்டி; க. ஞா. அகஸ்தீன், கற்கோவளம்; எஸ். ஆனந்தகுமார், புன்னாலைக்கட்டுவன் வடக்கு; திலகவதி ரஞ்சி, மல்லாகம் இந்துக்கல்லூரி; நீலலோசனி சபாபதிப்பிள்ளை, தம்பசிட்டி; ம. சேவியர் கருணாரத்தினம், கரவெட்டி; சு புவனேஸ்வரி, கொக்குவில்மேற்கு.

### கவனிக்கவும்

சிலர் விடைகளை அனுப்பும்பொழுது தங்களின் பெயர்களைக் குறிப்பிட மறந்துவிடுகிருர்கள். இதனுல் எமக்குப் பெரும் சிரமம் ஏற்படுகிறது. உங்களின் பெயரையும் விடைகளையும் தெளிவாக எழுதுமாறு மீண்டும் ஒருதடவை கேட்டுக் கொள்கின்றேன். கடந்தவாரம் கேட்கப்பட்ட கேள்வி பலரின் மூளைக்கு நல்ல வேலையைக் கொடுத்திருக்கிறது. காரணம்; விடையெழுதியவர்களில் நூற்றுக்குமதிகமானவர்கள் மூன்று, நான்கு பிழைகள் விட்டுள்ளனர். இதன்விளைவாக இவர்களது பெயர்கள் இம்முறை வெளிவரவில்லை.

### கேள்வி மண்டலம்

இம்முறையும் உங்களுக்கு சில கேள்விகளைக் கேட்கின்கின்றேன். முழுதும் சரியாக விடை எழுதுபவர்களின் பெயர்கள் மட்டுமே அடுத்தவாரம் வெளிவரும் என்பதை ஞாபகத்தில் வைத்திருங்கள். இதோ மூன்று கேள்விகள்:

(1) அதிகமான உலக மொழிகளில் பெயர்க்கப்பட்ட தமிழ்நூல் எது?

(2) கெய்ரோவில் அண்மையில் நடைபெற்ற மண்டலைசார் பற்ற மகாநாட்டைக் கூட்டிய மூவரின் பெயர்கள் என்ன?

(3) சீனுவின் மிகவும் சக்திவாய்ந்த தலைவர் யார்?

இந்த மூன்று கேள்விகளுக்குமுரிய விடைகளை தபாலட்டையில் எழுதி எதிர்வரும் சனிக்கிழமைக்கு முன்னர் அனுப்பி வையுங்கள். அனுப்ப வேண்டிய விலாசம் "மாணவர்மலர்", 'ஈழநாடு', த. பெ. 40, யாழ்ப்பாணம்.

- சாந்தா

## கப்பலில் பொருட்காட்சி

ஹாம்பெக், பெப். 16

மேற்கு ஜெர்மனியில் ஒரு கப்பலைப் பொருட்காட்சிச் சாலையாக மாற்றிவருகிருர்கள். இந்தக் கப்பலின் பெயர் 'பாஸட்'. இது 54 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டது. இது இனிமேல் பயன்படாதெனக் கடற்படையினர் சொல்லிவிட்டார்கள். பயன்படாத கப்பல்களை உடைத்து விடுவது வழக்கம். ஆனுல் இக்கப்பலை அப்படியே பொருட்காட்சிச் சாலையாக மாற்றவிருக்கிருர்கள். இதற்கு முன் 'டாட்ஷலண்ட்' என்ற பழைய கப்பல் கடற்படைப் பள்ளியாக மாற்றப்பட்டது. 'சியூட் டீர்ன்' என்ற கப்பல் இப்போது ஹோட்டலாக இயங்கிவருகிறது.

# கல்லூரி கிரிக்கெட் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், செவ்

இறுதியில் நடைபெற்ற யாழ் பாடசாலைக் கிரிக்கெட் போட்டியில் இரண்டு மாணவ வீரர்கள் நூறு ஓட்டங்கள் எடுத்து ரசிகர்களின் பாராட்டுதலைப் பெற்றுள்ளார்கள்; ஹாட்லிக் கல்லூரியைச் சேர்ந்த நடராசசுந்தரம் 104 ஓட்டங்கள், சென் ஜோன்ஸ கல்லூரியைச் சேர்ந்த முத்துத்தம்பி ஆட்டமிழக்காமல் 102 ஓட்டங்களையும் பெற்றுள்ளார்கள்.

## சென் ஜோன்ஸ் வெற்றி

இப்போட்டி சென் ஜோன்ஸ் மைதானத்தில் நடைபெற்றது. சென் ஜோன்ஸ் கல்லூரிமுதல் ஆட்டத்தில் 183 ஓட்டங்கள் எடுத்திருந்தது. தெய்வேந்திரம் 30 ஓட்டங்கள் பெற்ருர். சென். பற்றிக்ஸ் கல்லூரி கப்டன் அன்ரன் மிகவும் திறமையாகப் பந்தெறிந்து 52 ஓட்டங்களைக் கொடுத்து 6 விக்கட்டுகளைக் கைப்பற்றினுர். சென். பற்றிக்ஸ்முதல்ஆட்டத்தில் 105 ஓட்டங்களைப் பெற்றது. ஜெயரத்தினம் 25 ஓட்டங்களைப் பெற்ருர். குயின்ரல் ராசரட்ணம் 34 ஓட்டங்களுக்கு 4 விக்கட்டுகளை கைப்பற்றினுர். சென் ஜோன்ஸ் இரண்டாவது ஆட்டத்தின் இரண்டு விக்கட்ட நஷ்டத்திற்கு 186 ஓட்டங்களைப் பெற்று அத்துடன் தமது ஆட்டத்தை நிறுத்தியது. முத்துத்தம்பி, தெய்வேந்திரம் இருவரும் ஆட்டமிழக்காமல்முறையே 102, 56 ஓட்டங்கள் பெற்றுள்ளார்கள். சென். பற்றிக்ஸ் இரண்டாவது ஆட்டத்தில் ஆக 95 ஓட்டங்களே எடுக்க முடிந்தது. குயின்ரல் ராசரத்தினம் 6 ஓட்டங்களுக்கு 4 விக்கட்டுகளைப் பெற்ருர். ஜெயரத்தினம் ஒருவர் மாத்திரம் 21 ஓட்டங்களைப் பெற்ருர்.

## யாழ். இந்து தோல்வி

யாழ். இந்துக்கல்லூரிக்கும் யூனியன் கல்லூரிக்கும் இடையில் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் யூனியன் கல்லூரி இரண்டு விக்கட்டினுல் வெற்றியீட்டியது.

யாழ். இந்துக்கல்லூரி முதல் ஆட்டத்தில் 158 ஓட்டங்கள் பெற்றது. திறமையாக ஆடி 41 ஓட்டங்களைப் பெற்ருர். யூனியன் கல்லூரியைச் சேர்ந்த அருந்தவராசா 37 ஓட்டங்களுக்கு 4 விக்கட்டுகளைக் கைப்பற்றினுர், யூனியன் கல்லூரி முதல் ஆட்டத்தில் ஆக 82 ஓட்டங்களே எடுக்க முடிந்தது. சிவானந்தம், சோதிலிங்கம், சிவசத்தியசீலன் ஒவ்வொருவரும் முறையே 3 விக்கட்டிகளைப் பெற்ருர்கள். யாழ். இந்துக்கல்லூரி தனது இரண்டாவது ஆட்டத்தில் 104 ஓட்டங்களையே பெற்றது. பாலேந்திரன் 27 ஓட்டங்களைப் பெற்ருர் அருந்தவராசா 27 ஓட்டங்களை கொடுத்து 3 விக்கட்டுகளைக் கைப்பற்றினுர். யூனியன் கல்லூரி இரண்டாவது ஆட்டத்தில் 8 விக்கட் நஷ்டத்துக்கு தேவையான ஓட்டங்களைப் பெற்று இரண்டு விக்கட்டுகளால் வெற்றியீட்டியுள்ளார்கள். சிவானந்தன் 45 ஓட்டங்களைக் கொடுத்து 7 விக்கட்டுகளைக் கைப்பற்றினுர்.

## மகாஜனு வெற்றி

யாழ். இந்துக்கல்லூரிக்கும் மகாஜனுக் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் மகாஜனுக் கல்லூரி 5 விக்கட்டுகளால் யாழ். இந்துக்கல்லூரியைத் தோற்கடித்தது. யாழ். இந்துக் கல்லூரி முதல் ஆட்டத்தில் 168 ஓட்டங்களும் இரண்டாவது ஆட்டத்தில் 44 ஓட்டங்களும் எடுத்தது. சத்தியானந்தம் திறமையாக விளையாடி 43 ஓட்டங்களைப் பெற்ருர்.

மகாஜனுக் கல்லூரி முதல் ஆட்டத்தில் 173 ஓட்டங்களும் இரண்டாவது ஆட்டத்தில் 4 விக்கட் நஷ்டத்துக்கு 43 ஓட்டங்களையும் பெற்றது. விநாயகமூர்த்தி மிகவும் திறமையாகப் பந்து வீசினுர்.

## ஸ்கந்தா வெற்றி

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரிக்கும் சுன்னுகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்குமிடையே வட்டுக்கோட்டையில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் யாழ்ப்பாணக்கல்லூரி தோல்வி அடைந்துள்ளது.

வட்டுக்கோட்டை யாழ். கல்லூரி முதல் ஆட்டத்தில் 86 ஓட்டங்களும், இரண்டாவது ஆட்டத்தில் 61 ஓட்டங்களும் பெற்றது. ஸ்கந்தவரோதயக் கல்லூரி தமது இரண்டாட்டத்திலும் முறையே 84 ஓட்டங்களும் 8 விக்கட் நஷ்டத்திற்கு 65 ஓட்டங்களைப்பெற்று வெற்றியீட்டியது. யாழ். கல்லூரியைச் சேர்ந்த சண்முகா என்பவர் இரண்டு ஆட்டத்திலும் 10 விக்கட்டுகளைக் கைப்பற்றினுர்.

## ஹாட்லி வெற்றி

ஹாட்லிக்கல்லூரிக்கும் யூனியன் கல்லூரிக்குமிடையே நடைபெற்ற போட்டி தெல்லிப்பழை யூனியன் மைதானத்தில் நடைபெற்றது. இப்போட்டியில் ஹாட்லிக்கல்லூரியைச் சேர்ந்தவரும், கப்டனுமான நடராசசுந்தரம் மிகவும் திறமையாக துடுப்பெடுத்தாடி 104 ஓட்டங்களைப் பெற்ருர். இது இவரின் இரண்டாவது 'செஞ்சுரி' என்பது குறிப்பிடத்தக்கது.

முதல் இன்னிங்சில் ஹாட்லிக்கல்லூரி 264 ஓட்டங்கள் எடுத்தது. யூனியன்கல்லூரி முதல் இன்னிங்சில் 66 ஓட்டங்களும் இரண்டாம் இன்னிங்சில் 172 ஓட்டங்களும் எடுத்தது. ஹாட்லிக்கல்லூரி ஒரு இன்னிங்சாலும் 6 விக்கட்டுகளாலும் வென்றது.

# ஆசிய மகாநாடு

## மலேரியா பற்றி ஆராயும்

கொழும்பு, திங்கள்

இந்த ஆண்டில் மலேரியா பற்றி ஆராய்வதற்கான ஆசிய நாடுகளின் மகாநாடு இலங்கையில் ஜூன் நடைபெறுமெனத் தெரியவருகிறது. ஆசிய நாடுகளிலிருந்து 100 பிரதிநிதிகள் இந்த மகாநாட்டில் கலந்துகொள்ளவிருக்கிருர்கள். ஆசிய நாடுகளில் மலேரியா ஒரு பெரும் பிரச்னையாக இருப்பதால் அதனை மேலும் பரவாமல் எவ்வாறு தடைசெய்யலாம் என்பது குறித்தும் இந்த மகாநாட்டில் ஆராயப்படும்.

இலங்கையில் இவ்வாண்டில் மலேரியாவினுல் பாதிக்கப்பட்ட நோயாளிகள் குறிப்பிட்ட அளவிற்கு கூடியிருக்கிருர்கள் என்றும் கீழ்மாகாணத்தில் 100 நோயாளர்கள் இன்று மலேரியாவினுல் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்றும் தெரியவருகிறது.

# மகாஜனு வென்றது

சுழிபுரம், திங்கள்

யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் தெல்லிப்பழை மகாஜனுக் கல்லூரிக்கும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்குமிடையே நடைபெற்ற சிநேகபூர்வமான கிரிக்கெட் ஆட்டத்தில் மகாஜனுக் கல்லூரி 3 விக்கெட்டினுல் வெற்றியீட்டியது. மகாஜனுக் கல்லூரி முதலாவது ஆட்டத்தில் 159 ஓட்டங்களையும், யாழ்ப்பாணக் கல்லூரி 112 ஓட்டங்களையும் எடுக்கமுடிந்தது. இரண்டாவது ஆட்டத்தில் யாழ்ப்பாணக் கல்லூரி 77 ஓட்டங்களையும், மகாஜனுக் கல்லூரி 8 விக்கெட் நஷ்டத்துக்கு 123 ஓட்டங்களையும் எடுத்து வெற்றிபெற்றது.

# நியமனம்

கொழும்பு, திங்கள்

நீர்கொழும்பு உதவி மேயராக திரு. ஈ. ஜோன் சில்வா நியமிக்கப்பட்டுள்ளார். திரு. டென்ஸில் பெர்னுண்டோ மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

# புதிய ஜே: பி:

சுழிபுரம், திங்கள்

சங்கானை பட்டினசபைத் தலைவர் திரு. க. அம்பலவாணர் புதிய சமாதான நீதவானுக சத்தியப்பிரமாணம் எடுத்துக்கொண்டார். யாழ்ப்பாண மாஜிஸ்டிரேட் திரு. ரி. ஜே. இராசரத்தினம் முன்னிலையில் அவர் பதவிப்பிரமாணம் செய்தார்.

# "விடிவெள்ளி வீதி"

பருத்தித்துறை, திங்கள்

காலஞ்சென்ற எழுத்தாளர் "விடிவெள்ளி" க. பே. முத்தையாவின் ஞாபகார்த்தமாக உடுதுறை வத்தராயன் வார் எல்லைரோட்டுக்கு விடிவெள்ளி வீதி எனப் பெயரிடுவதென மேற்படி கிராமசபையின் கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டது. தலைவர் திரு. ஆ. ஐயம்பிள்ளையின் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் தலைவர் திரு. க. பே. முத்தையாவின் சேவைநலம் பாராட்டி உரைநிகழ்த்தியதுடன் இதன் சார்பான பிரேரணையைப் பிரேரிக்க திரு. செ. வேலுப்பிள்ளை ஆமோதித்தார்.


மனோகரா (யாழ்ப்பாணம்) (போன்) 485

Daily 4-45, 7-00 & 9-45

MANHUNT IN THE JUNGLE

(Serial)

REGAL — JAFFNA

NOW SHOWING

Chuck Connors–KamalaDevi

in

GERONIMO

(Panavision — Technicolor)

ராஜா சினிமா (சுழிபுரம்)

சிவாஜி - தேவிகா

நடிக்கும்

அன்னை இல்லம்

6-வது வெற்றி வாரம்!

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

தினசரி 3 காட்சிகள்: மாலை 2-30, இரவு 6-30, 9-30

சனி, ஞாயிறு 4 காட்சிகள்:

காலை 10-30, மாலை 2-30, இரவு 6-30, 9-30



சிவாஜி கணேசன் - சாவித்திரி

மற்றும் பலர் நடித்த

கர்ணன்

இப்பொழுது திரையிடப்படுகிறது!

கிங்ஸ்லி (கொழும்பு) | பிளாஸா (வெள்ளவத்தை) | நவா (கொம்பனித்தெரு)

மற்றும் 6 சினிமாஸ் திரைகளில்

ஜெமினி கணேசன் - சாவித்திரி

நடித்த

கற்பகம்


# பதில் நிரந்தர காரியதரிசி

கொழும்பு, திங்கள்

நீதியமைச்சின் முதலாவது உதவிக்காரியதரிசி இம்மாதம் 4-ம் திகதி முதல் நீதியமைச்சின் நிரந்தரக்காரியதரிசியாக கடமையாற்றுவார். வெளிநாட்டிலுள்ள நிரந்தரக்காரியதரிசி ஜே. அர். குணவர்த்தன தாயகம் திரும்பும்வரை திரு. எஸ். கனகராயர் நிரந்தரக் காரியதரிசியாக கடமையாற்றுவார்.


வரி விளம்பரம்

## தொய்வு, நீரிழிவு

குணப்படுத்த உத்தரவாதம். மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய சுற்றலோக் இனும். தொய்வுக்கு 10 நாள் மருந்து. 12-50 நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10–50.

வைத்தியர் பரிபூரணுனந்தா கைலாயபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

இருண்ட உலகின் தேச விளக்கு

எப்பொழுதும் யார்?

கால் - அரை - முக்கால் மணிதர்களா? ஆடம்பர மோகினிகளா? நஞ்சுக்கல்வி நிபுணர்களா? குண்டு-பீரங்கி-அணுப் படையினர்களா? இல்லை! உண்மைக்கான தியாகிகளும்- வள்ளல்களும் - அறிஞர்களும் ஆவர்!! இவரே திருவள்ளுவர் மகான் ஆவர்!!! இதையறிந்த சென்னை மாணவரின் - மந்திரியார்களின் தியாகம், ஹிந்திக்கு இடந்தருமா? சன்மார்க்க தவகூடம் - கந்தரோடை, யாழ்ப்பாணம். 1586


# முருகானந்தா வெற்றி

மானிப்பாய், திங்கள்

நவாலி முருகானந்த விளையாட்டுக்கழகக் கிரிக்கெட் கோஷ்டிக்கும் சட்டிவிப்பாய் விளையாட்டுக் கழகக் கிரிக்கெட் கோஷ்டிக்கும் வார முடிவில் நடைபெற்ற போட்டியில் முருகானந்தக்கழகம் ஒரு விக்கெட்டாலும் ஐந்து ஓட்டங்களாலும் சண்டிலிப்பாய்க் கழகத்தைத் தோற்கடித்தது. முருகானந்தக் கழகக் கோஷ்டித் தலைவர் மா. செல்வராசா 24 ஓட்டங்களும், க. அருள் சோதிரத்தினம் 18 ஓட்டங்களும் பெற்றது குறிப்பிடத்தக்கது. ஆ. சிவராசா இரண்டு ஆட்டங்களிலும் மொத்தம் எட்டு விக்கட்டுகள் எடுத்தார்.

சண்டிலிப்பாய்க் கழகக் கோஷ்டித் தலைவர் இ. திருச்செல்வம் இரண்டு ஆட்டங்களிலும் ஏழு விக்கெட்டுகளை வீழ்த்தினுர். சுதந்திரம் 10 ஓட்டங்கள் எடுத்தார்.

சண்டிலிப்பாய் விளையாட்டுக் கழகம் 1-வது ஆட்டம்-44 ஓட்டங்கள்; 2-வது ஆட்டம்-24 ஓட்டங்கள்.

முருகானந்த விளையாட்டுக் கழகம் 1-வது ஆட்டம்-58 ஓட்டங்கள்; 2-வது ஆட்டம்-9 விக்கெட்டுக்கு 15 ஓட்டங்கள்


அதிக இலாபமடையுங்கள்

உங்கள் கால் நடைகளுக்கு, முற்றிலும் புதிய, பூரணமாக சமன் செய்த, உயரிய போஷாக்குடைய தீனை

ஹைவிட்டா மீல்

ஊட்டுங்கள்

இது உங்கள் கோழிகளுக்கு ஊட்ட உகந்த அதியுன்னத கலவையுங்கூட.

HYVITA

ஹைவிட்டா உற்பத்திப் பொருட்கள், ஜா-எல மில்ஸ், ஜா-எல.

டெலிபோன்: ஜா-எல-216. கொழும்பு-5767.

# தமிழர்களுக்கு விமோசனமளிக்கும் இறுதிவழி தனியாட்சியே

## தமிழரசு, தமிழ்காங்கிரஸ் தலைவர்கள் ஒப்புக் கொண்டனர்

கொழும்பு, திங்கள்

**இலங்கையில் உள்ள தமிழர்களுக்கு தனியரசுதான் விமோசனமளிக்கக்கூடிய கடைசிவழி என்பதை தமிழரசு, தமிழ்க்காங்கிரஸ் தலைவர்கள் சென்ற சனிக்கிழமை பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்ற ஹாட்லிக்கல்லூரி பழையமாணவர்சங்க விருந்தில் கலந்துகொண்டு பேசுகையில் ஒப்புக் கொண்டனர்.**

தமிழரசுக்கட்சியின் பொதுக் காரியதரிசி திரு. அ. அமிர்தலிங்கம் பேசுகையில் தமிழர்கள் சிங்களமக்களுடன் ஒற்றுமையுடனும், நல்லெண்ணத்துடனும் வாழ சமஷ்டிமுறைதான் ஒரேயொரு சிறந்த வழியென்று குறிப்பிட்டார்.

தமிழ்க்காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் பேசுகையில், தமிழ்ப் பகுதிகளை விருத்தி செய்யக்கூடிய மூலவளங்களோ முதலீடுகளோ இல்லையென்றும் இதனால் சமஷ்டிஆட்சி தமிழர்களுக்கு உகந்ததல்லவென்றும் தெரிவித்தார்.

ஈழத்தமிழ் ஒற்றுமை முன்னணித்தலைவர் திரு. வி. சுந்தரலிங்கம் பேசுகையில் தமிழ், சிங்கள இராச்சியங்கள் தனித்தனியாக இயங்க வேண்டுமென்பதை [ஏ]மியன்ஸ் ஒப்பந்தமே அங்கீகரித்திருக்கிறது என்று குறிப்பிட்டார்.

திரு. அமிர்தலிங்கம் மேலும் குறிப்பிட்டதாவது:

தமிழ்மக்கள் சிங்கள மக்களுடன் ஒற்றுமையாகவும் நல்லெண்ணத்துடனும் வாழ வழி வகுக்கக்கூடிய சிறந்த வழி சமஷ்டி முறைதான். ஒற்றையாட்சியின் கீழ் தமிழ்மக்கள் மொழி, குடியேற்ற, பிரஜா உரிமை முதலிய பலவிஷயங்களில் கஷ்டமடைந்து வருகிறார்கள், பல இன, மொழி மக்கள் வாழும் பலநாடுகளில் சமஷ்டிமுறை புகுத்தப்பட்டு அது வெற்றிகரமாக செயல்பட்டு வருகிறது. சமஷ்டி முறை இலங்கைக்கு ஒத்துவராதிருக்கக் கண்டால் தனியாட்சியே ஒரேயொரு மாற்று வழியாகும்.

இந்த நேரத்தில் திரு. பொன்னம்பலம் எழுந்து, "ஒற்றையாட்சி தமிழர்களுக்கு விமோசனமளிக்காவிடில் நாம் திரு. சுந்தரலிங்கத்தின் பின்னால் அணிவகுத்து நிற்போம்" என்று குறிப்பிட்டார். திரு. பொன்னம்பலம் முன்னர்குறிப்பிட்டதாவது:

தமிழ்ப்பகுதிகள் தென் இந்தியாவுக்கு அண்மையில் இருப்பதால் சமஷ்டிமுறைபற்றி பெரும்பான்மை சமூகத்தினர் அச்சம் கொள்கின்றனர். தமிழர்களின் பரம்பரை வசிப்பிடம் இலங்கையின் தென்பகுதியாயிருந்தால் நிச்சயமாக சமஷ்டி முறையைப் பெரும்பான்மை மக்கள் ஒத்துக் கொண்டிருப்பர். தமிழ்மக்கள் சிங்கள மக்களுடன் ஒற்றுமையாகவும், நல்லுறவும் வாழ ஐக்கிய இலங்கையும் ஒற்றையாட்சித் திட்டமுமே உகந்தன.

திரு. வி. சுந்தரலிங்கம் பேசுகையில் தமிழரசு, தமிழ்க்காங்கிரஸ் தலைவர்களின் பேச்சுகளிலிருந்து அவர்களின் இறுதி இலட்சியம் தனியரசு என்பதைக் கேட்கத் தாம் மகிழ்ச்சி அடைவதாகத் தெரிவித்தார்.

### 'நிலை தளரக்கூடாது'

உடுப்பிட்டி, திங்கள்

25 லட்சம் தமிழ்மக்களின் ஏகோபித்த உரிமைக்குரல் எதிர்வரும் தேர்தலில் பிரதிபலிக்க வேண்டும். தொடர்ந்த வரலாறுள்ள ஒரு கட்சிதான் நமக்கு வாழ்வளிக்க முடியும். சமுதாய நோயின் தன்மையறிந்து பணியாற்றும் கட்சி தமிழரசுக்கட்சி. வடக்குக்கிழக்கு மாகாணங்களில் தமிழ்மக்கள் எந்தக் கொள்கையை ஆதரிக்கிறார்கள் என்பதைச் சிங்களமக்கள் உன்னிப்பாகக் கவனித்து வருகிறார்கள். இந்தச் சமயத்தில் நாம் நிலைதளரக் கூடாது. தமிழினத்தின் சுயநிர்ணய உரிமை இத்தேர்தலின் மூலந்தான் நிலைநாட்டப்படவிருக்கிறது. கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்பவற்றிற்கமைய நாம் செயலாற்ற வேண்டும்."

இவ்வாறு திரு. ஈழவேந்தன் உடுப்பிட்டித் தொகுதி தமிழரசு வேட்பாளர் திரு. க. ஜெயக்கொடியை ஆதரிக்குமுகமாக கரணவாய் வடக்கு சைவவித்தியாசாலைக் கண்மையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

திரு. க. ஜெயக்கொடி பேசுகையில், உரிமை என்ற ஒன்றை இலங்கையில் இல்லாமல் செய்வதற்கு எவ்வளவு முயற்சிகளைக் கையாள முடியுமோ அவ்வளவையும் கையாண்டு வருகிறது சிங்கள அரசாங்கம். தமிழினத்தின் பிரச்னைகள் தீர்க்கப் படவேண்டுமானால் தமிழர்கள் தங்கள் பிரதிநிதியாக ஒரே தலை இயக்கத்தையே பாராளுமன்றத்திற்கு அனுப்பவேண்டும். தமிழரசுக்கட்சியின் உதவியை நாடாமல் எந்தவொரு சிங்களக்கட்சியும் ஆட்சிபீடத்திலேற முடியாது. அத்தருணத்தில் எமது ஒற்றுமையைப் பேரம் பேசியாவது இழந்த உரிமைகளைப் பெற முடியும். தனிப்பட்ட திறமைசாலிகளுக்கு அரசாங்கங்கள் பணிந்து கொடுத்ததாக வரலாறே கிடையாது" என்று கூறினார். வேறு பலரும் பேசினர்.

### முத்தமிழ்மன்ற அங்குரார்ப்பணம்

சுன்னாகம், திங்கள்

சுன்னாகம் முத்தமிழ்மன்ற ஆரம்பவிழா அண்மையில் வைத்தியகலாநிதி ஆ. நடராசாவால் சுன்னாகம் கிராம முன்னேற்றசபை மண்டபத்தில் குத்துவிளக்கேற்றி ஆரம்பித்து வைக்கப்பட்டது. ஆ. நடராசா தலைவராகவும் பண்டிதர் ச. கந்தசாமி உபதலைவராகவும் க. நவரத்தினம் காரியதரிசியாகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

மேலும் மன்ற மூலம் சிறுவர்களுக்கும் வாலிபர்களுக்கும் சங்கீதம், நாடகம் இலக்கியம்போன்ற கலைகளை கற்றுக்கொடுப்பதற்கு வகுப்புகள் நடத்துவதென தீர்மானித்துள்ளனர்.

### தேவை

பாண், கேக் மற்றும் ஜெயாபிஸ்கட்டுகளையும் கமிஷனில் கொண்டு சென்று விற்பதற்கு ஆட்கள் தேவை.

லேக்வியூ ஹோட்டல், யாழ்ப்பாணம். 1587

### அசைஸ் நீதிமன்றம் நாளை ஆரம்பம்

நல்லூர், செவ்வாய்

வடபகுதி அசைஸ் நீதிமன்றத்தின் இவ்வாண்டுக்கான முதலாவது பருவ விசாரணை நாளை புதன்கிழமை நகரமண்டபத்தில் ஆரம்பமாகவிருக்கின்றது.

இப்பருவ விசாரணையை நீதியரசர் பி. ஸ்ரீஸ்கந்தராஜா நடத்துவார். இப்பருவ விசாரணைக்காக இதுவரை 16 வழக்குகள் சேர்க்கப்பட்டுள்ளன.

### இன்று

பொன்னாலை வரதராஜப் பெருமான் கோவிலில் கடந்த பத்து நாட்களாக நடைபெற்று வந்த லட்சார்ச்சனை இன்று பூர்த்தியாகிறது. சுவாமி, திருவடி நிலையில் காலை தீர்த்தமாடுவதற்காக எழுந்தருளுவார்.

### வானொலி நிகழ்ச்சிகள்

**கொழும்பு**

**செவ்வாய் 16-2-65**

(செய்திகள்: காலை 7-15, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-00 துதிப் பாடல்கள், 7-30 மெல்லிசை.

பகல் 12-00 திரை கானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்தின வாழ்த்துக்கள், 5-15 வனரும்பயிர், 5-45 திரைஇசை.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 ஸ்ரீலங்கா குறுக்கு எழுத்துபபோட்டி, 7-00 வயலின்-பரஞ்சோதி பரராஜசிங்கம், 7-30 மத்தாப்பு. 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி. 9-15 நேயர் விருப்பம், 9-15 நாகசுரம்.

### சதிக்குற்றச்சாட்டு ஐவருக்கு மரணதண்டனை

பெருட், பெப். 15

ஸிரியா அரசாங்கத்தைக் கவிழ்க்கச் சதிசெய்த குற்றத்துக்காக, டமாஸ்கஸிலுள்ள ராணுவ நீதி மன்றம் இன்று ஐவருக்கு மரணதண்டனை விதித்தது.

### கத்திவீரன் கைதானார்

காங்கேசன்துறை, திங்கள்

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையில் கடமையாற்றும் காவற்காரர் ஒருவர் கடமை முடிந்து இரவு 9-30 மணிக்கு வீடு செல்லுகையில் மயிலிட்டியில் வைத்து ஒரு நபர் கத்தியால் குத்துவதாகப் பயமுறுத்தி சைக்கிளை வழிப்பறி செய்துவிட்டதாகக் கூறப்படுகிறது. அந்த வழியால் காங்கேசன் துறைப் பொலிசைச் சேர்ந்த இரு பொலிசார் இராக்காவல் ரோந்தில் வரும்பொழுது காவல்காரர் இச்செய்தியைக் அவர்களிடம் கூறவே அவர்கள் அந்த நபரை துரத்திப் பிடிக்கையில் அந்த சந்தேக நபர் அந்தப் பொலிசாரையும் கத்தியால் குத்துவதாகப் பயமுறுத்தியும் அவர்கள் சிதம்பரப்பிள்ளையைத் தந்திரமாகப் பிடித்து றிமாண்டில் வைத்துள்ளார்கள்.

### பௌர்ணமிநிகழ்ச்சி ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், செவ்வாய்

யாழ்ப்பாணம் திறந்தவெளி அரங்கில் நேற்றிரவு நடைபெறவிருந்த பௌர்ணமிக் கலை விழா, கடந்த இருதினங்களாகப் பெய்த மழைகாரணமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

சில காலமாக மாநகரசபையினால் கைவிடப்பட்டிருந்த கலை விழா நிகழ்ச்சிகள் மீண்டும் ஆரம்பித்து நடத்துவதென முடிவுசெய்யப்பட்டுள்ளது.

# பொருட்காட்சியை 8 லட்சம் பேர் பார்த்தனர்

கொழும்பு, திங்கள்

குதிரைப் பந்தயத் திடலில் அமைக்கப்பட்டுள்ள கைத்தொழில் பொருட்காட்சியை இதுவரை எட்டு லட்சத்து இருபத்தி ஐயாயிரம் பேர் பார்த்திருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. நேற்று மட்டும் ஒரு லட்சத்து இருபத்தி ஐயாயிரம் பேர் பொருட்காட்சியை சென்று பார்த்தனர்.

**கிரகமண்டலம்**

கிரகமண்டலம் இப்பொழுது திறந்துவைக்கப்பட்டிருப்பதால் தினமும் பல்லாயிரக் கணக்கான மக்கள் இங்கு வருகின்றனர்.

### மழையினால் பாலம் உடைந்தது

காங்கேசன்துறை, திங்கள்

காங்கேசன்துறையிலுள்ள ஊரணியில் பாலமொன்று நேற்றுப் பெய்த கடும் மழை காரணமாக உடைந்ததால் பாலத்துக்கு சமீபத்தில் வசித்து வந்த ஊரணியைச் சேர்ந்த கந்தையா என்பவரின் வீட்டை வெள்ளம் அடித்துக் கொண்டு போய்விட்டது. இதனால் அவர் தமது உடைமைகளையும் இழந்துள்ளார். இக்குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் வேறொரு அயலவர் வீட்டில் தற்பொழுது தங்கியிருக்கின்றனர்.

# இந்தி, ஆங்கில திணிப்பு......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

**100 மாணவர் விடுதலை**

சென்னையில் 100 மாணவர்கள் விடுதலை செய்யப்பட்டிருப்பதாய் பொலிஸ் கமிஷனர் அறிவித்திருக்கிறார். மிகுதியுள்ள 319 மாணவர்கள் விஷயமும், இதர 2500 பேர் விஷயமும் பரிசீலனைக்குப் பின் முடிவு செய்யப்படும் என அவர் மேலும் அறிவித்தார்.

**பொலிஸாருக்கு பாராட்டு**

திருப்பூரில் உயிருடன் கொளுத்தப்பட்ட இரு சப் இன்ஸ்பெக்டர்களின் குடும்பங்களுக்கு தலா 20,000 ரூபாய் வழங்கப்படுமென்றும் மதுரை கடலூரில் உயிரிழந்த இரு பொலிஸ் கான்ஸ்டபிள்களின் குடும்பங்களுக்கு தலா 10,000 ரூபாயும் வழங்கப்படுமென முதன் மந்திரி திரு. பக்தவத்சலம் இன்று அறிவித்தார், இவைதவிர விசேஷ பென்ஷன் திட்டமும், குழந்தைகளுக்கு இலவசக் கல்வி வசதி ஆகியன அளிக்கப்படுமென்றும் முதன் மந்திரி அறிவித்தார்.

தமிழ் நாட்டில் ஏற்பட்ட வன்முறைச் செயல்களை பொலிஸார் பொறுப்புடனும், திறமையுடனும் சமாளித்ததற்காக முன்கூட்டியே அவர்களுக்கு ஒரு சம்பள உயர்வு அளிக்கப்படும் என்றும், ஆயுதப்படைகளுக்கும் இது பொருந்தும் என்றும் அவர் மேலும் அறிவித்தார். இச்சம்பள உயர்வு மூலம் ரூபா ஒன்பதரை லட்சம் செலவாகும், அரசாங்கத்தின் பாராட்டுதலை பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் மூலமாக பொலிஸாருக்கு தெரிவிக்க விரும்புவதாயும் முதன் மந்திரி கூறினார்.

**தனியாக சமாளித்தார்**

கோடம் பாக்கம் ரயில் நிலையத்தில் 1000 பேர் கொண்ட ஒரு கூட்டத்தை தன்னந்தனியாகச் சமாளித்த ஆர். மதன் மோகன் என்ற கான்ஸ்டபிளுக்கு இன்று பரிசு வழங்கப்பட்டது.

மற்றொரிடத்தில் ரயிலை ஓட்டிவந்த நஞ்சப்ப செட்டியார் என்ற என்ஜின் டிரைவருக்கு 200 ரூபாய் வழங்கப்பட்டது. வழியில் வைக்கப்பட்டிருந்த ஒரு பாறையைக் கண்டு அவர் ரயிலை நிறுத்தியிராவிட்டால் பெரிய விபத்து நேர்ந்திருக்கும் என்றும். பிரயாணிகளின் உதவியுடன் அவர் பாறையை அகற்றிவிட்டு ரயிலை ஓட்டிச்சென்றார் என்றும் கூறப்பட்டது.

**சட்ட அறிஞர்களுடன் ஆலோசனை**

சென்னை முதன் மந்திரி திரு. பக்தவத்சலம் அநுபவம் பெற்ற வழக்கறிஞர்களையும் நீதிபதிகளையும் சந்தித்து ஆங்கிலம் தொடர்ந்து அமுல் நடாத்தப்பட்டால் சட்டபூர்வமாக எவ்வித பாதுகாப்பு கொள்கையை மேற்கொள்ள வேண்டும் என்பது பற்றி தெரிந்துகொள்ள ஆராய்ந்தார், முன்னாள் பிரதம நீதிபதி திரு. பி. பி. ராஜமன்னார், முன்னாள் அட்வகேட் ஜெனரல் ராஜஐயர், தற்போதைய அட்வகேட் ஜெனரல் திரு. கிருஷ்ணசாமிசெட்டியார், அண்ணாமலை பல்கலைக்கழக உபவேந்தர் டாக்டர் ஸி. பி. ராமஸ்வாமி ஐயர் ஆகியோரே அவர்கள்.

மும்மொழித் திட்டத்தில் போதிய முன்னேற்றம் ஏற்படவில்லை என்றும், இதுபற்றியும், மற்றும் சகல அம்சங்கள் பற்றியும் வருகிற 23, 24-ந் திகதிகளில் நடைபெறவிருக்கும் முதல் மந்திரிகள் மகாநாடு ஆராயும் என உள்நாட்டு மந்திரி நந்தா தெரிவித்திருக்கிறார்.


### மூக்கு கண்ணாடி நிபுணர் ஸ்தாபனம் ஒன்றுக்கு உபசரிப்பு உதவியாளர் தேவை

குறிப்பிட்ட பதவிக்கு பெண் மனுதார்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. மனுதார்கள் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகக்கொண்டிருக்கவேண்டியது அவசியம்.

மனுதார் ஆங்கிலத்தில் நல்ல தேர்ச்சியுடையவராகவும் குறைந்தது ஜி. சி. ஈ. (சாதாரணம்) தகுதியுடையவராகவும் இருக்கவேண்டும்.

மனுதார் கவர்ச்சிகரமானவராகவும், புத்திக்கூர்மையுடையவராகவும் இருக்கவேண்டும். தேர்ந்தெடுக்கப்படும் மனுதார் கொழும்பில் ஒரு மாதகாலப் பயிற்சி பெற தயாராகவிருக்கவேண்டும்.

வேதனம் பற்றி நேர்முகப் பரீட்சையின்போது தெரிவிக்கப்படும்.

உங்களைப்பற்றிய விபரங்களை எங்களுக்கு எழுதுங்கள்.

த. பெ. எண்:- 1616,
C/o "ஈழநாடு",
யாழ்ப்பாணம்.

1616


இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 58-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 16-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.